



கல்முனை– அக்கரைப்பற்று பிரதான வீதியில் தொடந்தும் போக்குவரத்து பாதிப்பு அசௌகரியத்துக்கு மத்தியில் துன்பத்தோடு பயணிக்கும் மக்கள் (படங்கள்: வடிவேல் தினேஷ்)


விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 42 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (06.12.2024)


## மதுவரி லைசன்ஸ் வழங்குவதில் ஒழுங்கான முறைமை வேண்டும்



மதுவரி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் ஒழுங்கான முறைமையொன்றைப் பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் நேற்று (05) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார். அதிகாரிகள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டத்திற்கு முரணான விடயங்களை மேற்கொள்ளக் கூடாது எனவும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சட்டத்தை அமுல்ப்படுத்துவது அவசியம் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, உரிய நேரத்தில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதிகாரிகளுக்கு பணிப்புரை வழ ங்கினார். (தொடர்ச்சி...)

02

# தேங்காய்க்கு தட்டுப்பாடு இல்லை: சந்தையில் சதி

## செயற்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயற்சி:

## இன்றுமுதல் தீர்வு என்கிறார் அமைச்சர் வசந்த



**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு இல்லை. உற்பத்தியும் அதிகமாக இடம்பெற்றுள்ளது. ஆனால், தேங்காய் மாஃபியாக்கள் சந்தையில் விலையை அதிகரிக்கும் நோக்கில் தேங்காய்களை பதுக்கி வைத்திருப்பதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் டி.வி.சானக்க, சந்தையில் தேங்காய்க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், 240 ரூபாவரை தேங்காயின் விலை உயர்ந்துள்ளதாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத் திருந்தார். இவரது குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் வசந்த சமரசிங்க இவ்வாறு கூறினார்.

02



## தென்.கொரிய ஜனாதிபதி மீது தேசத்துரோக விசாரணை!



தென் கொரியாவில் இராணுவச் சட்டத்தை அமுல்ப்படுத்தும் முயற்சியில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு எதிரான ”தேசத்துரோக” குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணையை அந்நாட்டு பொலிஸார் வியாழனன்று (05) ஆரம்பித்தனர்.

தென் கொரியாவின் யோன்ஹாப் செய்தி

02

## 3 மாதத்தில் கவிழ்ந்தது பிரான்ஸ் அரசு



பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றது. இதனால், பிரதமரான மூன்றே மாதத்தில் பதவியை இழந்தார் மிஷேல் பார்னியர். பிரான்ஸ் வரலாற்றில் 60 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு பிரதமரின்

02

## லொஹான் தம்பதியினர் பிணையில் விடுதலை



**(கனூஷியா புஷ்பகுமார்)**

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே மற்றும் அவருடைய மனைவி ரஷீ பிரபா ஆகியோர் நேற்று வியாழக்கிழமை (05) பிணையில் விடுதலை

02

## மலையக மக்களின் பிரச்சினைக்கு காணி உரிமையே நிரந்தரத் தீர்வு

### நாடாளுமன்றத்தில் ஜீவன் தொண்டமான் வலியுறுத்து



**( பாலகணேஷ் டிலுக்ஷா)**

மலையக மக்களின் பிரச்சினைக்குக் காணி உரிமையே நிரந்தர தீர்வாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜீவன் தொண்டமான் “மலையகத்தை எடுத்துக் கொண்டால் முதலாவது சம்பளப் பிரச்சினை. ஆயிரம் வேண்டும் இரண்டாயிரம் வேண்டும் என்று ஏலம் விடுகின்றோமே தவிர அதற்கு நிரந்தர தீர்வினை பெறவில்லை. பெருந்தோட்டப் பகுதிகளில்ம

02

## 8 வாரங்களுக்குள் மின் கட்டணம் குறைக்கப்படும்...?

**(ஆர்.மனோசங்கர் )**

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதறகான திருத்தப்பட்ட யோசனையை இன்று (06) பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தரவு மதிப்பாய்வு தற்போது நிறைவடைந்துள்ளதாகமின்சார சபை குறிப்பிட்டுள்ளது. இதன்படி, மின்சாரக் கட்டணம் எவ்வளவு வீதம் குறைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் இறுதிக் (தொடர்ச்சி.)

02

## ஹந்தான மலையில் சிக்கிய பல்கலை மாணவர்கள் மீட்பு



**(எம்.ஏ.அமீனுல்லா)**

ஹந்தான மலை உச்சியில் காணாமல் போயிருந்த 10 பாடசாலை மாணவர்களை ஆறு மணித்தியால நடவடிக்கையின் பின்னர் பத்திரமாக மலையடிவாரத்திற்கு கொண்டு வருவதற்கு பொலிஸார் மற்றும் இராணுவ அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

கிரிபத்கொட பிரதேசத்தில் வசிக்கும் 16–17 வயதுடைய பாடசாலை மாணவர்களைக் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் (04) பிற்பகல் கண்டிக்கு சென்று, பேராதனை சரசவிகம பிரதேசத்திலிருந்து ஹந்தானை மலைக்கு சுற்றுலா சென்றனர்.

பனிமூட்டமான காலநிலை காரணமாகக் கீழே இறங்க வழி தெரியாமல் தவித்த மாணவர்கள் (தொடர்ச்சி.)

02

## இலங்கை வந்தடைந்தார் டொனால்ட் லூ



**(ஆர்.மனோசங்கர்)**

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ நேற்று வியாழக்கிழமை (05) அதிகாலை இலங்கை வந்தடைந்தார்.

தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ இந்தியா, (தொடர்ச்சி.)

02

## ஐ.எம்.எப் ஒப்பந்த திருத்தம் உறுதி பட்ஜெட்டில் மக்கள் அறியலாம்

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் திருத்தப்பட்ட நிபந்தனைகள் 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என சபைத் தலைவரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். (தொடர்ச்சி.)

02

## லெபனானிலிருந்து இலங்கையர்களை வெளியேற்றிவரும் தூதரகம்



**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

இஸ்ரேலுடனான மோதல் காரணமாகப் பாதிக்கப்படக்கூடிய 55 இலங்கைத் தொழிலாளர்கள் கொண்ட குழுவை லெபனானில் இருந்து வெளியேற்றத் தேவையான ஏற்பாடுகளை அங்குள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டுள்ளது. சர்வதேச குடியேற்ற அமைப்புடன் (IOM) இணைந்து இந்த (தொடர்ச்சி.)

02

## வெள்ளத்தில் நாசம்: நெற்காணிகளை கணிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பம்!

### ஹெக்டயருக்கு ஒரு இலட்சம் என கமநல காப்புறுதி சபை அறிவிப்பு



**( முகம்மட் முக்தார்)**

அண்மைய வெள்ளம் காரணமாக நாடளாவிய ரீதியில் சேதமாகிய வயல் நிலங்களைக் கணக்கெடுக்கும் பணிகளைக் கமநல காப் புறுதி சபை மேற்கொண்டு வருவதாக கமநல காப்புறுதி சபை அறிவித்துள்ளது.

இக்கணக்கெடுப்பிற்காக நாடளாவிய ரீதியில் கமநல காப்புறுதி அதிகாரிகளைக்கொண்ட 15 குழுக்கள் பணிக்கமர்த்தப்பட் டுள்ளதாகவும் அவற்றின் அறிக்கை கிடைத்ததும் நஷ்டஈடு

02

## லொறி - ஓட்டோ மோதி விபத்து : ஒருவர் பலி : 3 பேர் படுகாயம்

### வாழைச்சேனையில் சம்பவம்



**(கனகராசா சரவணன்)**

வாழைச்சேனை பொலன்னறுவை வீதியிலுள்ள மியான்குளம் பகுதியில் லொறியும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 3 பேர் படுகாயமடைந்த சம்பவம் புதன்கிழமை (04)இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் லொறி சாரதியைக் கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

02

# அரசியல் பக்கச்சார்பின் அடிப்படையில் முதலீட்டு வாய்ப்புகளுக்கு இனி இடமில்லை

## - ஜனாதிபதி உறுதி

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச்சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தங்களும் இனிமேல் இடம்பெறாது. நாட்டுக்கு உகந்த தூய்மையான முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முழுச் சுதந்திரத்தை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று (05) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை போலவே நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அது தொடர்பிலான பாரிய பொறுப்பு முதலீட்டுச் சபைக்கு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

### இலங்கை வந்தடைந்த...

இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக அவர் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளார். டொனால்ட் லூவுடன், இராஜாங்க திணைக்களத்தின் மற்றுமொரு உயர் அதிகாரியும் தூதுக்குழுவாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

இவர்கள் நேற்று அதிகாலை 02.55 மணியளவில் தோஹாவில் இருந்து கட்டார் எயார்வேஸ் விமானமான KR-662 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை வரவேற்க இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழு மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்றும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றது.

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளுக்களிலும் டொனால்ட் லூ கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது அமெரிக்கா மற்றும் இலங்கை கூட்டாக இணைந்து நிலையான பொருளாதார வளர்ச்சி, ஊழல் எதிர்ப்பு மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னிலைப்படுத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லெபனாலிருந்து...

வெளியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதன்படி, 27 இலங்கையர்கள் கொண்ட குழு நேற்று முன்தினம் மாலை (டிசம்பர் 04) கொழும்புக்கு அனுப்பப்பட்டது. லெபனானில் உள்ள சர்வதேச குடியேற்ற அமைப்பின் உதவியைப் பாராட்டிய இலங்கைத் தூதரகம், லெபனானில் பதற்றமான சூழ்நிலை நிலவிய போதிலும், இலங்கையர்களுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்குவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவதாகத் தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லா போர் நிறுத்த நிபந்தனைகளை மீறினால் லெபனானில் மீண்டும் போர் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக இஸ்ரேல் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தது. இம்முறை தாக்குதல்கள் ஆழமாக இருக்கும் எனவும் இஸ்ரேல் கூறியுள்ளது. போர்நிறுத்தம் உள்ள போதிலும், இஸ்ரேலியப் படைகள் தெற்கு லெபனானில் தாக்குதல்களைத் தொடர்ந்தன. இஸ்ரேலிய-லெபனான் எல்லையிலிருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள லிட்டானி ஆற்றின் வடக்கே தாக்குதல்களை நிறுத்தவும், பின்வாங்கவும் ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா புறக்கணித் தமையால் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இதனால் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டு மீண்டும் போர் ஏற்படும் சூழல் இருப்பதால் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த லெபனானில் உள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

### 3 மாதத்தில்...

ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், பார்னியர் 91 நாட்கள் மட்டுமே பிரதமராக இருந்துள்ளார். அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் இத்தகைய குறுகிய காலத்தில் பிரதமர் பதவியை இழந்தவராக மிஷேல் பார்னியர் அறியப்படுகிறார்.

பிரான்ஸ் நாட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பாராளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தலை நடத்தினார்.

இத்தேர்தலில், மேக்ரானின் மையவாத கூட்டணி, இடதுசாரிகள் கூட்டணி, அதிதீவிர வலதுசாரிகள் கூட்டணி ஆகியவை போட்டியிட்டன. இதில் அதிதீவிர வலதுசாரிகளின் தேசிய பேரணி கட்சி வெற்றி பெற்றது. இந்தக் கட்சிக்கு அதிபரின் ஆதரவும் கிட்டியது. இருந்தாலும் பெரும்பான்மை பலமற்ற அரசாங்கமாகவே அக்கட்சி ஆட்சியமைக்க முடிந்தது. இதனையடுத்து பிரான்ஸின் புதிய பிரதமராக மிஷேல் பார்னியர் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் மிஷேல் பார்னியர் தேர்வுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு போராட்டங்களும் நடைபெற்றன.

பிரான்ஸ் பாராளுமன்றத்தில் பிரதமர் மிஷேல் பார்னியேர் 2025-ம் ஆண்டுக்கான சமூக பாதுகாப்பு பாதீட்டை தாக்கல் செய்திருந்தார். இந்த வரவு செலவு திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனால் அதிபர் மேக்ரோனின் ஆதரவு இருப்பதால் அதிபரின் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பாதீட்டை எப்படியும் நிறைவேற்றியே தீருவேன் என மிஷேல் பார்னியேர் கூறியிருந்தார்.

இதனால், பிரான்ஸ் பாராளுமன்றத்தில் பிரதமர் மிஷேல் பார்னியேருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் மிஷேல் பார்னியர் தோல்வியடைந்தார். மொத்தமுள்ள 577 உறுப்பினர்களில் 331 பேர் அரசுக்கு எதிராக வாக்களித்தனர். இந்த தோல்வியைத் தொடர்ந்து தமது பிரதமர் பதவியை மிஷேல் பார்னியேர் இராஜினாமா செய்தார். அவரது இராஜினாமாவைத் தொடர்ந்து அதிபரும் பதவி விலக வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

### தெ.கொரியா...

நிறுவனத்தின் தகவல்களுக்கு அமைவாக,

குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதியிடம் விசாரணை மேற்கொள்ள தேசிய பொலிஸ் முகவர் நிலையத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இராஜினாமா செய்த பாதுகாப்பு அமைச்சர் கிம் யோங்-ஹியூன், இராணுவ தளபதி ஜெனரல் பார்க் அன்-சு மற்றும் உள்துறை அமைச்சர் லீ சாங்-மின் ஆகியோர் மீதும் தேசத்துரோகம் மற்றும் பிற தொடர்புடைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்கொரியாவின் தேசிய சட்டமன்றம் ஜனாதிபதி யூன் சுக் யோலின் (Yoon Suk Yeol) இராணுவச் சட்ட மூலத்தை தீர்மானமாக இரத்து செய்ததை அடுத்து, நாடு செவ்வாய்க்கிழமை (03) இரவு ஒரு வியத்தகு அரசியல் எழுச்சியைக் கண்டது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தென் கொரியாவின் முதல் இராணுவச் சட்டத்தை திணிக்க யூனின் முயற்சியானது, அதன் நவீன ஜனநாயக வரலாற்றில் நாட்டை கடும் கொந்தளிப்பில் ஆழ்த்தியது.

இது நாடு முழுவதும் பரவலான எதிர்ப்புக்களைத் தூண்டியதுடன், ஆசியாவின் நான்காவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டில் மிகப்பெரிய அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

இதன் பின்னணியில், யூனுக்கு எதிரான முறைப்பாடுகள் அரசுத் தரப்பிலும் உயர் அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவரது தோல்வியுற்ற இராணுவச் சட்ட நடவடிக்கையை அடுத்து, ஜனநாயகக் கட்சியின் தலைமையிலான ஆறு எதிர்க்கட்சிகள் யூன் மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிம் ஆகியோருக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானத்தை தாக்கல் செய்தனர்.

### மதுவரி...

மதுவரி வசூலிப்பதில் உள்ள சிரமங்கள் மற்றும் அதில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அறவிடப்படவேண்டிய வரியை வசூல் செய்தல், கருப்புப் பட்டியிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் வரி வசூலிக்க முடியாத நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை தடை செய்தல் போன்ற புதிய முறைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், வரி அறவீடு செய்வதில் தற்போதுள்ள சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், வரி அறவீட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் மதுவரி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு முறையிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடையில் நல்லபிப்பிராயம் கிடையாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நாட்டின் பொருளாதாரத்திற்கு சாதகமான வகையில் அந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதேவேளை, உற்பத்தி மற்றும் பொதியிடல் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளினால் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டதோடு ,செயற்கைக் கள்ளு பாவனையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் ரோஹன சேனாரத்ன, பிரதி மதுவரி ஆணையாளர் ஆர். வி. எஸ். திஸ்ஸ குமார, உதவி மதுவரி ஆணையாளர் எம். ஜே. டி சில்வா, பிரதம நிதி அதிகாரி ஜி. ஏ. சாந்தனி, பிரதம கணக்காளர் டபிள்யூ. ஆர். பரணகம உள்ளிட்ட மதுவரித் திணைக்கள உயர் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

### 8 வாரங்களுக்குள்...

கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

திருத்தப்பட்ட பிரேரணையை சமர்ப்பித்த பின்னர், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இலங்கை மின்சார சபை, மின்சார கட்டணத்தைக் குறைப்பதற்கான பிரேரணையை முன்னர் சமர்ப்பித்திருந்த போதிலும், அதனைத் திருத்தியமைத்து மீண்டும் சமர்ப்பிக்க வேண்டுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

அதன்படி புதிய திருத்தப்பட்ட முன்மொழிவு மின்சார சபையினால் இன்று முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, மின்சாரக் கட்டண திருத்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆறு முதல் எட்டு வாரங்களுக்குள் மின் கட்டணத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய கட்டண திருத்த பரிந்துரையை பெற்று, ஆய்வு செய்த பின்னர் அது குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லொஹான்...

செய்யப்பட்டனர்.

நுகேகொடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேயின் மனைவியான ரஷீ பிரபா ரத்வத்தேவுக்கு சொந்தமான மிரிஹான, எம்புல்தெனிய வீதியில் மூன்று மாடிக் குடியிருப்பில் இலக்கத்தகடு இன்றி அதிசொகுசு கார் ஒன்று தரித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

மிரிஹான பொலிஸார் குறித்த வாகனம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளில் அது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு இணைக்கப்பட்ட வாகனம் என தெரியவந்துள்ளது.

குறித்த வாகனத்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி லொஹான் ரத்வத்தே கடுகஸ்தோட்டையில் வைத்து மிரிஹான பொலிஸார் கைது செய்தனர்.

அதன்பின்னர், லொஹான் ரத்வத்தேயின் மனைவியான ரஷீ பிரபா ரத்வத்தேயும் கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த வாகனம் தொடர்பில் அறிந்திருந்ததாக நீதிமன்றில் மிரிஹான பொலிஸார் மூலம் காரணிகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் ரஷீ பிரபா விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

### தேங்காய்க்கு...

அவர் மேலும் தெரிவித்தாவது,

சந்தையில் தேங்காய்க்கு செயற்கையான தட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் மாஃபியாக்கள் ஈடுபட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் மொத்த தேங்காய் அறுவடை 2,684 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அது 14 வீதம் குறைவாகும். என்றாலும், நாட்டின் தேவைக்கு மேலதிகமான உற்பத்தியே இது. ஆனால், தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேங்காய்க்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை அதிகரிப்பதே மாஃபியாக்களின் நோக்கமாகும். அதற்கு எதிராக செயல்பட வேண்டியது அரசாங்கத்தின் பணி என்ற அடிப்படையில் தேங்காய் பற்றாக்குறைக்கு தீர்வை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்றுமுதல் (நேற்று) 15 இலட்சம் தேங்காய்கள் சதொச ஊடாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சதொசயில் 130 ரூபாவுக்கே தேங்காய் விற்பனை செய்யப்படும்.

அரசாங்கத்திற்கு சொந்தமான சிலாபம் மற்றும் குருணாகல் தோட்டங்களின் மூலம் தேங்காய்களை பெற்று இந்த விநியோகத்தை அரசாங்கம் செய்கிறது. அத்துடன், தெங்கு அபிவிருத்தி சபையும் எமக்கு தேங்காய்களை வழங்க உள்ளது." என்றார்.

### ஹந்தானையில்...

மலை உச்சியில் இரவைக் கழித்து விட்டு மறுநாள் அதிகாலையில் இறங்க முடிவு செய்தனர், ஆனால் கடுமையான குளிரால் பல மாணவர்கள் நோய்வாய்ப்பட்டதையடுத்து

அவர்கள் தங்கள் பெற்றோருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கண்டி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கண்டி இரண்டாம் சிங்கப் படையணி உதவியுடன் பொலிஸார் மாணவர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தேடுதலின் பயனாக நேற்று முன்தினம்(05) நள்ளிரவு மாணவர்கள் இருந்த இடத்தை பொலிஸாரும் இராணுவத்தினரும் சென்றடைந்து, மலையுச்சியிலிருந்து அவர்களை மீட்டு முதலுதவி செய்தனர். இறுதியாக கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத் நேற்று (05) காலை மாணவர்களை கொழும்புக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தார்.

### வெள்ளத்தில்...

வழங்கும் பணிகள் ஆரம்பமாகும் எனவும் மேற்படி சபையின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

ஹெக்டயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்கப்படும். கமத்தொழில் காப்புறுதி சபையில் காப்புறுதி செய்யப்பட்ட காணிகளுக்கு முதற்கட்டமாக நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

அண்மைய வெள்ளம் காரணமாக நாடளாவிய ரீதியில் 3,80,000 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணிகள் வெள்ளத்தில் அழிந்து போயின. இதில் அம்பாறை மாவட்டத்தில் ஆகக்கூடுதலான சேதம் ஏற்பட்டது. இம்மாவட்டத்தில் 73,000 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணிகள் வெள்ளத்தால் கழுவிச் செல்லப்பட்டுள்ளன.

அம்பாறை, பதுளை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, பொலன்னறுவை, கிளிநொச்சி, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நெற்செய்கை மிகக்கடுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான நெல்வயல்கள் மண்மேடுகளாக காட்சியளிக்கின்றன. பல அணைக்கட்டுக்கள் வெள்ளத்தால் சேதமாகியுள்ளன.வரலாறு காணாத சேதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### லொறி...

புனானை ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய கனகசூரியன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினம் இரவு 8.00 மணி அளவில், பொலன்னறுவை பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த லொறியும் வாழைச்சேனையில் இருந்து புனானை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியும் மியான்குளம் பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியில் பயணித்த 65 வயதுடைய ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்ததுடன் 3 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தில் புனானை ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த எம்.வினோதன், கணபதிப்பிள்ளை யோஹனா மற்றும் ரிதிதென்னையைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதியான உசனார் மஜிதீன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். ஹாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த லொறி சாரதியைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### ஐ.எம்.எப் ஒப்பந்தம்...

"அடுத்த மூன்று ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் நாங்கள் பணியாற்ற வேண்டும். அதற்குள், திருத்தங்களைச் செய்யலாம் என நம்புகிறோம்.

நாங்கள் சில திருத்தங்களைச் செய்துள்ளோம். இவற்றை அவ ணர்களுடன் கலந் துரையாடியே முன்வைத்துள்ளோ ம்.வரவு -செலவுத் திட்டத்தில் குறித்த திருத்தங்களுக்கான விதிமுறைகளை நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள்.

வற் வரியை குறைப்பதாக அரசாங்கம் பொய் கூறியதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்துள்ள கூற்றை நிராகரிக்கிறோம். உறுதியாக வற் வரி குறைக்கப்படும். எந்தவொரு வரி குறைப்பும் நாடாளுமன்ற சட்டமூலத்தின் ஊடாகவே அமுல்படுத்தப்பட முடியும்.

வரவு - செலவுத் திட்டத்தில் வற் வரி குறைப்பு தொடர்பிலான முதலாவது திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்" என்றார்.

### மலையக...

உள்ள வறுமை குறைவதற்கு நாட்கூலி சம்பள முறையிலிருந்து மாற வேண்டும். நாங்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சம்பள உயர்வை வழங்கியுள்ளோம். வெளியிலிருந்து கூறுவது இலகு. பெருந்தோட்ட நிறுவனங்களின் ஆதிக்கமே இதற்குக் காரணம்.

தற்போது ஆளுங்கட்சியிலுள்ள தொழிற்சங்கத்தை சேர்ந்த தலைவர்கள் மக்களை நாம் ஏமாற்றியதாகக் கூறுகிறார்கள். அவர்களிடமே தீர்வைக் கேட்டோம். அடிப்படை நாள் சம்பளமாக 2138 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். தற்போது அவர்கள் ஆளுங்கட்சியில் உள்ள நிலையில் மக்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி இணைந்து மக்களுக்கு உண்மையை எடுத்துரைப்போம். நான் ஆட்சியிலிருந்த போது எதிர்க்கட்சியிடமிருந்து எனக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

தற்போது ஆளுங்கட்சிக்குக் கிடைத்துள்ள இந்த பாராளுமன்ற பலத்தைக்கொண்டு மலையக மக்களுக்கு நிரந்தர தீர்வை வழங்க முடியும். ஒரே இரவில் மாற்றம் ஏற்பட வேண்டும் என நாம் கூறவில்லை. இருக்கும் காலப்பகுதியில் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம்.

அமைச்சுப் பொறுப்பிலிருந்த போது 3000 மில்லியன் மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டது. அதனை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரினோம். ஆனால் அதிகரிக்கப்படவில்லை.

வரவு செலவுத் திட்டத்தில் நிதி அதிகரித்தால் மாத்திரமே சிறப்பாக செயலாற்ற முடியும். இதுவரை மலையகத்தில் 66,000 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அப்போதும் மாற்றம் ஏற்படவில்லை என்றால் பிரச்சினை வீடு அல்ல. காணி உரிமையே தேவைப்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் பெருந்தோட்ட நிறுவனங்களின் ஒப்பந்தங்களிலிருந்து மக்கள் வாழும் இடங்களை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

# இடைக்கால கணக்கறிக்கை நேற்று சபையில் முன்வைப்பு

## முதல் நான்கு மாதங்களுக்கு அரச செலவு 2600 பில்லியன்: கடன் பெறும் வரம்பு 4000 பில்லியன்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

2025 ஆம் நிதியாண்டின் முதல் 04 மாதங்களுக்கான அரச செலவினங்கள், மூலதனச் செலவுகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு, இதர கடன் சேவைக்கான அனுமதியைப் பெறும் இடைக்கால கணக்கறிக்கையை நேற்று வியாழக்கிழமை பிரதமர் ஹறிணி அமரசூரிய நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீது நேற்று ஆரம்பமான விவாதம் இன்றும் நடைபெற்று இன்று மாலை இதன்மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இடைக்கால கணக்கு அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்வைத்த யோசனைக்குக் கடந்த நவம்பர் 25ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. முதல் நான்கு மாதங்களுக்கு 2600 பில்லியன் ரூபா இடைக்கால கணக்கறிக்கையின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால கணக்கறிக்கையின் பிரகாரம் முதல் நான்கு மாதங்களுக்கான அரசின் வருவாய் 1600 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.அடிப்படை கடன் வரம்பு ரூ.1000 பில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மீண்டெழும் செலவீனங்களுக்காக 1000 பில்லியன் ரூபாவும், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு, வட்டிச் செலுத்தல் மற்றும் இதர கடன் சேவைகளுக்கு 1175 பில்லியன் ரூபாவும், மூலதன செலவுக்காக 425 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

என்றாலும், கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பணிகள் இடம்பெற்று வருவதால் காலதாமதங்கள் ஏற்பட்டால் அடிப்படை கடன் பெறும் வரம்பை 4000 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கவும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இறையாண்மை கடன் பத்திரங்களை வெளியிடவும் அரசாங்கம் இடைக்கால கணக்கறிக்கையில் ஏற்பாடுகளை செய்துள்ளது.

# இஸ்ரேல் லெபனான் யுத்தம்

## 27 பேர் இலங்கை திரும்பினர்

லெபனான் மீது இஸ்ரேல் நடத்தும் யுத்தம் காரணமாக லெபனானில் தங்கியிருந்த 27 இலங்கையர்கள், கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக புதன்கிழமை (04) நாடு திரும்பினர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவர்களில் 05 சிறு பிள்ளைகள், 03 பெண்கள் மற்றும் 19 ஆண்கள் அடங்குவர்.

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, லெபனானில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இணைந்து இந்த இலங்கையர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இவ்வாறே கடந்த ஒரு மாத கால இடைவெளியில் 04 இலங்கையர் குழுக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அதன்படி லெபனானில் தங்கியிருந்த 53 இலங்கையர்கள் இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த 27 இலங்கையர்களும் எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமானம் மூலம் துபாயிலிருந்து புதன்கிழமை (04) இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** அபரிமிதமான சக்தியாக இருப்பீர்கள்.

**ரிஷபம்** உங்களைப் பற்றி நன்றாகவும் நம்பிக்கையாகவும் உணர்வீர்கள்.

**மிதுனம்** கடந்த காலங்களில், நீங்கள் முதலீடு செய்த பணத்தின் பலனை பெருவீர்கள.

**கடகம்** மற்றவர்களிடம் மதிப்பைப் பெறக் கூடிய திறமைக்கு வெகுமதி கிடைக்கும்.

**சிம்மம்** உங்கள் பர்சனாலிட்டியை மேம்படுத்த சீரியசாக முயற்சி செய்யுங்கள்.

**கன்னி** பிறரை குற்றம் சொல்லும் பழக்கத்துக்காக நீங்கள் குற்றச்சாட்டுக்கு ஆலாகலாம்.

**துலாம்** மத மற்றும் ஆன்மிக நலன்களைப் பின்பற்ற இன்று நல்ல நாள்.

**விருட்சிகம்** உடலை கட்டுக்கோப்பாகவும் மனதை நன்றாகவும் வைக்க யோகாவும் தியானமும் உதவும்.

**தனுசு** உணர்ச்சிபூர்வமாக நீங்கள் மிக்க நிலையான எண்ணத்தில் இருக்க மாட்டீர்கள்.

**மகரம்** உடல் நோயில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

**கும்பம்** அடிக்கடி உடைந்து போவது சில பிரச்சினைகள் தரும்

**மீனம்** தாமதமான நிலுவைகள் வசூலாகும் என்பதால் பண நிலைமை மேம்படும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** பஞ்சமி திதி காலை 11:14 PM அதன் பிறகு சஷ்டி திதி.

**நட்சத்திரம்:** திருவோணம் நட்சத்திரம் மாலை 04:50 PM அதன் பிறகு அவிட்டம் நட்சத்திரம்.

**யோகம்:** மரண சித்த யோகம்.

**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** திருவாதிரை, புனர்பூசம்.

**சூலம்:** மேற்கு.

**பரிகாரம்:** வெல்லம்.

**லக்னம்:** விருச்சிக லக்னம்.

**இராகு காலம்:** காலை 10:30 AM முதல் 12:00 PM வரை,

**குளிகை:** காலை 07:30 AM முதல் 09:00 AM வரை,

**எமகண்டம்:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை,

# கல்முனை- அக்கரைப்பற்று போக்குவரத்து தொடர்ந்தும் பாதிப்பு; மக்கள் அசௌகரியம்

## கனரக வாகனங்களுக்கு அனுமதி மறுப்பு

(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக நிந்தவூர் மாட்டுப்பளை பாலம் கடந்த மாதம் 26 ஆம் திகதி இரவு தாழிறங்கியது. 27 ஆம் திகதி முதல் மாட்டுப்பளை பாலத்தின் திருத்தப்பணிகள் இடம்பெற்று வருவதுடன் கனரக வாகனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொதுப் போக்குவரத்தானது நிந்தவூர் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை பகுதியிலிருந்து அக்கரைப்பற்று, பொத்துவில் நோக்கி செல்லும் பொதுப் போக்குவரத்து நிந்தவூர் பகுதி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று அக்கரைப்பற்று பொத்துவில் பகுதியிலிருந்து வரும் போக்குவரத்து ஒலுவில் பகுதி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் மாணவர்கள், அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொது மக்கள் இதனால் அசௌகரியத்திற்குள்ளாகியுள்ளனர்.

# பெருந்தோட்ட அமைச்சில் மீளாய்வு கலந்துரையாடல்





பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் அவற்றின் தற்போதைய நிலையை மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன மற்றும் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்கு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல், திறமையான பொது சேவையின் மூலம் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் போன்ற விடயங்களை நிவர்த்தி செய்தல் ஆகியவை ஆராயப்பட்டது. கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபை , தென்னை அபிவிருத்தி அதிகார சபை,தென்னை ஆராய்ச்சி மையம், கப்ருக நிதியம், பனை அபிவிருத்தி சபை ,கித்துள் அபிவிருத்திச் சபை, இலங்கை முந்திரி கூட்டுத்தாபனம், மசாலா மற்றும் அது சார்ந்த பொருட்கள் சந்தைப்படுத்தல் சபை ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

இலங்கை சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் 2024ஆம் ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை 7ம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சுங்கத் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தின் 11ம் மாடியிலுள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து 2024ம் ஆண்டு ஓய்வுபெற்ற சுங்க அதிகாரிகளுக்கான கௌரவிப்பும் தொடர்ந்து கவியரங்கமும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் சகல உறுப்பினர்களும் குடும்ப சகிதம் தவறாது கலந்துகொள்வதுடன் அதனைத் தொடர்ந்து சுங்கத் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தின் 9 ஆம் மாடியிலுள்ள மன்றத்தில் நடைபெறவுள்ள விருந்துபசாரத்திலும் பங்கேற்குமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

# பங்களாதேஷ் இந்துக்களின் பாதுகாப்புக்காக கொழும்பில் அமைதி ஆர்ப்பாட்டம்

உலக இந்து அமைப்புகள் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதி ஆர்ப்பாட்டமொன்று நேற்று கொழும்பு 7 பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் முன்பாக நடைபெற்றது.

பங்களாதேஷில் ஒடுக்கப்படும் இந்து சிறுபான்மை சமூகத்தின் துயர நிலையை வெளிக்கொண்டு வரும் விதமாகவும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகவும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இவ்விடயத்தில் சர்வதேச தலையீட்டின் அவசியம் குறித்தும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் வலியுறுத்தப்பட்டது.

மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தின் போது, பங்களாதேஷ் இந்து சமுதாயத்தின் பாதுகாப்பு, சமத்துவம், மற்றும் அடிப்படை மனித உரிமைகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்தில் முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# செலவு அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் இன்று

(கனூஷியா புஷ்பகுமார்)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் செலவு அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் இன்று வெள்ளிக்கிழமை (06) நள்ளிரவுடன் நிறைவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தற்போது வரையில் குறைவான எண்ணிக்கையிலானோரே செலவு அறிக்கைகளை வழங்கியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார். கடந்த 3ஆம் திகதி பிற்பகல் வரை 1985 வேட்பாளர்கள் செலவு அறிக்கைகளை வழங்கியுள்ளனர். 106 அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் தற்போது வரையில் குறித்த அறிக்கைகளை வழங்கியுள்ளதாக ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார். இனியும் கால அவகாசம் வழங்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அதன் காரணமாக, குறித்த செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் அதனை இன்று (06) நள்ளிரவுக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு சமர்ப்பிக்கத் தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆர். எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

# ரேணுக பெரேராவுக்கு பிணை

(கனூஷியா புஷ்பகுமார்)

வடக்கில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றமை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்ப் பிரசாரம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளரான ரேணுக பெரேராவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளரான ரேணுக பெரேரா, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (5) காலை கைது செய்யப்பட்டார். குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று நேற்றுக்காலை அவரின் வீட்டுக்குச் சென்று வாக்குமூலமொன்றைப் பெற்றதன் பின்னரே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

# குளத்தில் மூழ்கி மூன்றரை வயது குழந்தை மரணம்

பருத்தித்துறை பகுதியில் குளத்தில் வீழ்ந்த பென்சிலை எடுக்க இறங்கிய மூன்றரை வயது குழந்தை ஒன்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளது. குறித்த சம்பவம் பருத்தித்துறை - திருமால்புரம், வல்லிபுரம் பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இதில் ரஜீவன் சுஜீ என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குழந்தை தனது கையில் வைத்திருந்த பென்சில் ஒன்றுடன் சென்றுகொண்டிருந்தபோது அது தவறி குளத்தில் வீழ்ந்துள்ளது.

அதனை எடுப்பதற்காக குளத்தில் இறங்கியவேளை குழந்தை நீரில் மூழ்கியுள்ளது.அச்சந்தர்ப்பத்தில் குழந்தையை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## தென்கொரிய ஜனாதிபதியின் இராணுவச் சட்டமும் அதன் தாக்கங்களும்

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் கடந்த செவ்வாய்க்கிழமை (03.12.2024) அந்நாட்டில் அவசரகால இராணுவ ஆட்சியை அமுல்படுத்தியதால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

வடகொரியாவின் கொம்யூனிஸ்ட் படைகளின் அச்சுறுத்தல்களிலிருந்து தென்கொரியாவை பாதுகாக்கும் நோக்கிலும் உள்நாட்டில் தேச விரோத சக்திகளை ஒழிக்கும் நோக்கிலும் இராணுவ ஆட்சியை அமுல்படுத்தியதாக அவர் விளக்கமளித்திருந்தார். வடகொரிய ஆதரவாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் கூறிய போதிலும் அவருக்கு எதிராக கண்டனங்கள் வெளியிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு இராணுவ வீரர்களும் பொலிஸாரும் அனுப்பப்பட்டதுடன் முகமூடி அணிந்த ஆயுதம் ஏந்திய வீரர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்ததாகவும் தகவல்கள் வெளியாகின. இதன்போது ஊழியர்கள் தீயணைப்புக் கருவிகள் மூலம் அவர்களைத் தடுக்க முயன்றதாகவும் செய்திகள் வெளியாகின.

போராட்டங்கள் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளை தடை செய்வதற்கான உத்தரவை இராணுவம் வெளியிட்டது. ஊடகங்களை அரசு கட்டுப்பாட்டில் வைப்பதற்கான உத்தரவையும் இராணுவம் பிறப்பித்தது.

அரசின் இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன. அதுமட்டுமின்றி மக்கள் தொடர்ந்து ஜனாதிபதி யூன் சுக் யோல் பதவி விலக வேண்டும் என கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் இந்நடவடிக்கை சட்டவிரோதமானது மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரானது என தென் கொரிய அரசியல்வாதிகள் இராணுவச் சட்டப் பிரகடனத்தை விமர்சித்தனர். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலருமே இதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இராணுவ சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றம் முன்பாக ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். "இராணுவ ஆட்சி வேண்டாம்", "சர்வாதிகாரம் முறியடிக்கப்பட வேண்டும்" போன்ற வாசகங்கள் பொறித்த பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், மக்கள் பிரதிநிதிகளும் இந்த உத்தரவைத் திரும்பப் பெற வலியுறுத்தி வாக்களித்தனர். சட்டத்தைத் திரும்பப் பெற தேசிய சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மொத்தமுள்ள 300 பேரில் 190 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனை தொடர்ந்து தென்கொரிய ஜனாதிபதி அந்த அவசரநிலை இராணுவ சட்டத்தை மீளப்பெறுவதாக அறிவித்தார்.

ஆனாலும், தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன. அதன்படி, தென் கொரிய ஜனாதிபதி பதவிநீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் 3 இல் இரண்டு பெரும்பான்மை ஆதரவும், குறைந்தபட்சம் 6 அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளின் ஆதரவும் தேவைப்படும்.

அவரது தோல்வியுற்ற இராணுவச் சட்ட நடவடிக்கையை அடுத்து, ஜனநாயகக் கட்சியின் தலைமையிலான ஆறு எதிர்க்கட்சிகள் யூன் மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிம் ஆகியோருக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சர் கிம் இராஜினாமா செய்ததையடுத்து அவர் தனது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், யூனுக்கு எதிரான பதவி நீக்க வாக்கெடுப்பு சனிக்கிழமை (07) நடைபெற உள்ளது.

ஜனாதிபதி யூன் சுக் யோல், 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பல்வேறு சவால்களுக்கும் இன்னல்களுக்கும் முகங்கொடுத்தே வந்துள்ளார். பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி மகத்தான வெற்றியைப் பெற்றதன் பின்னர் அவரது அரசாங்கம் சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கு பெரிதும் போராட வேண்டிய நிலைக்கு ஆளாகியது. பல்வேறு ஊழல் மோசடி காரணங்களாலும் மக்கள் மத்தியில் அவருக்கான ஆதரவும் சரிந்தது.

தென் கொரியாவில், முன்னாளைய சர்வாதிகாரி பார்க் சுங்-ஹீ ஆட்சிக் கவிழ்ப்பின்போது படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இறுதியாக அங்கு 1979 ஆம் ஆண்டில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தென் கொரியாவில் இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டமை அதுவே முதன்முறையாக அமைந்தது. தென் கொரியா 1987 ஆம் ஆண்டு ஜனநாயக நாடாக மாறியதிலிருந்து, இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த சர்ச்சை தென் கொரிய ஜனநாயகத்திற்கு மாத்திரமல்லாது பொருளாதாரத்திற்கும் மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. இராணுவ சட்டத்தை அமுல்படுத்துவதாக வெளியான அறிவிப்பைத் தொடர்ந்து தென்கொரியாவின் நாணய மதிப்பு பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளமையும் கவனிக்கத்தக்க விடயமாகும். மேலும், இந்த சர்ச்சை ஜனநாயக நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்பதுடன் இத்தகைய ஜனநாயக விரோத முன்னெடுப்புக்களானது ஏனைய உலக நாடுகளுக்கும் ஒரு முன்னுதாரணமாக இருந்துவிடக் கூடாது. இதுவே ஜனநாயகத்தை விரும்பும் அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது என்பதை நாமும் பதிவு செய்ய விரும்புகின்றோம்.

# புதுடில்லியை சமாளிப்பாரா அநுர ?

## உற்றுநோக்கும் சர்வதேசம்; ரணிலின் ரகசிய நகர்வு எதற்கு?

சுப்ரமணியம் நிஷாந்தன்

ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்திய பயணத்துக்கு முன்னர் இடம்பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியப் பயணம் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பயணமாக இராஜதந்திர மட்டத்தில் அவதானிக்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் இடம்பெற உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

என்றாலும், ஜனாதிபதி தமது முதலாவது வெளிநாட்டு பயணத்தை மத்திய கிழக்கு நாடொன்றுக்கு மேற்கொள்ள தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டிருந்தாக தெரியவருகிறது.

### பாரம்பரியத்தை பின்பற்ற விரும்பும் அநுர

இதற்கு காரணம் மூன்று மத்திய கிழக்கு நாடுகளிடம் சலுகை விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்ய அநுரகுமார திசாநாயக்க, அமெரிக்காவில் உள்ள இலங்கை பேராசிரியர் ஒருவர் ஊடாக பேச்சுகளை நடத்தியுள்ளார்.

இதன் அடிப்படையில் இந்த நாடுகளுடனான இறுதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக தமது முதலாவது வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்ள அநுரகுமார திசாநாயக்க ஆரம்பத்தில் திட்டமிட்டுள்ளார். என்றாலும், இந்த ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் பின்பற்றிய பாரம்பரியம் காரணமாக அதிலிருந்து பின்வாங்கிய அநுரகுமார திசாநாயக்க, முன்னைய அரச தலைவர்கள் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணத்தின் பாரம்பரியத்தை பின்பற்ற திட்டமிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் இந்திய பயணம் மிகவும் தீர்க்கமான ஒன்றாகும். இந்த பயணத்தை சர்வதேச சமூகம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதே இதற்குக் காரணம்.

### இராஜதந்திரிகள் உன்னிப்பாக அவதானம்

இந்த பயணத்தில் ஜனாதிபதி எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை, முன்னாள் ஜனாதிபதி இந்தியாவுடன் ஏற்கனவே கையெழுத்திட்ட ஒப்பந்தங்களாகும். குறிப்பாக ரணிலின் ஆட்சிக்காலத்தில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு, மன்னாரில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலையத்தை அமைக்க அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடு, கொழும்பு துறைமுகத்தில் மேற்கு முனையத்தை நிர்மாணிக்கும் பணியை அதானி குழுமத்துக்கு வழங்கியமை, இந்தியா – இலங்கையில் இடையில் நிலத் தொடர்பை ஏற்படுத்துவது உட்பட பல்வேறு உடன்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர தமது பயணத்தில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியுடன், இந்த ஒப்பந்தங்கள் அனைத்தையும் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்திருந்தமையால் இந்தியப் பயணம் தொடர்பில் சர்வதேச நாடுகளும் இலங்கையில் உள்ள இராஜதந்திரிகளும் உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளனர்.

### இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு

இந்திய ஒப்பந்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி இவ்வாறு கருத்துகளை தெரிவித்திருந்தமைக்கான காரணம் அவர் இந்திய பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர், இந்தியா தொடர்பான தனது நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிகாட்ட வேண்டிய தேவை இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், அவரது பயணத்துக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு





பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். அவரது இந்த பயணத்தில் இந்திய – இலங்கை உறவு தொடர்பிலும் அநுர அரசாங்கம் தொடர்பிலும் சில கருத்துகளையும் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

இராஜதந்திர ரீதியாக தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கும் நோக்கத்துடன், ரணில் விக்ரமசிங்கவின் இந்த அவசர பயணம் அமைந்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கொள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை இந்தியா பொறுத்துக்கொள்ளவில்லை. இதற்கு எதிராக நீண்டகாலமாக இந்தியா செயல்பட்டு வருகிறது.

### ரணில் விக்ரமசிங்கவின் இராஜதந்திர நகர்வு

சமகால அரசாங்கம் சீனாவுடன் சில நெருக்கமான உறவை பேணும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துகளை பகிர்ந்துவரும் பின்புலத்தில் இலங்கைக்கான சீன தூதுவர் கீ.ஷென்ஹொங், அநுர அரசாங்கத்துடன் எம்மால் நெருக்கமாக பணியாற்ற முடியும் என்ற கருத்தை அடிக்கடி கூறிவருவதுடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சீனாவின் செல்வாக்கை அதிகரிப்பதற்கான நகர்வுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரவின் சில கருத்துகள் இந்தியாவுடனான நெருங்கிய உறவுக்கு எதிர்காலத்தில் பாதகத்தை ஏற்படுத்தலாம் என ரணில் விக்ரமசிங்க தரப்பு கருதுகிறது. அதன் காரணமாகவே அநுரவின் இந்திய பயணத்துக்கு முன்னர் ரணில் இந்தியா சென்றுள்ளார். இந்திய அரசுக்கு மறைமுகமாக சில செய்திகளை சொல்லும் நோக்கில் அவரது பயணம் அமைந்திருக்கிறது.

சீனாவுடன் நெருங்கி பணியாற்ற விரும்பும் அநுரவுக்கு இந்திய பயணம் மற்றும் ரணில் விக்ரமசிங்கவின் முன்னைய அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்டுள்ள உடன்பாடுகள் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கைகளும் வெளியாகியுள்ளன.

### சாதகமாக்கும் முயற்சியில் ரணில்

இதற்கு மத்தியில் இந்தியாவின் தலையீட்டில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜே.வி.பி தெரிவித்துவரும் கருத்துகளும் இந்தியாவை அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது. இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கை தக்கவைத்துக்கொள்ள 13ஆவது திருத்தச்சட்டம் முக்கிய ஆயுதமாக 1987ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதனை அரசியலமைப்பிலிருந்து நீக்கி தமது அரசியல் செல்வாக்கை இழக்க ஒருபோதும் இந்தியா விரும்பாது. அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கு, இந்தியா தொடர்பான சமகால அரசாங்கத்தின் நிலைப்பாடு இதற்கு மத்தியில் ரணில் விக்ரமசிங்க உட்பட முன்னாள் ஆட்சியாளர்களின் நகர்வுகள் என்பன அநுரவின் இந்திய பயணத்தில் பாரிய தாக்கத்தை செலுத்தும்.

சமகால அரசாங்கம் இந்தியாவுடன் முரண்பாடான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டால் அதனை தமக்கு சாதமாக்கும் முயற்சியில் ரணில் தரப்பு ஈடுபடலாம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# தமிழரசுக் கட்சி ஜனாதிபதியுடன் சந்திப்பு







ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி (ITAK) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு புதன்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நீண்ட காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம்கொடுத்து வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்கமளித்தனர்.

சிவஞானம் சிறீதரன், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகநாதன் குகதாசன், சாணக்கியன் ராசமாணிக்கம், ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், இளையதம்பி ஸ்ரீநாத், துரைராசா ரவிகரன் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

## ஹாபிஸ் இஸ்ஸதீனுக்கு அரச இலக்கிய விருது

(பீ.எம் முக்தார்)



பேருவளை பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் அரும்பு அறிவியல் சஞ்சிகையின்ஆசிரியரும் பன்னூலாசிரியருமான ஹாபிஸ் இஸ்ஸதீனுக்கு 2023 ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்பு நாணவித இலக்கியத்திற்கான அரசு விருது வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் அலரி மாளிகையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றின் போது மேற்படி விருது வழங்கப்பட்டுள்ளது. சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்ட ‘ஓர் இளம் ஆசிரியை கருப்பு வெள்ளை சாம்பல் நிற நியமனம்’ என்ற நூலில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் தேசிய ஒருமைப்பாடு சமூக பாதுகாப்பு வெகுசன ஊடக அமைச்சு மூலம் விருது வழங்கலுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## “சகல பெண்களும் இணைந்து நாட்டை பாதுகாப்போம்”

ரோஹினி விஜேரத்ன எம்.பியின் பரிந்துரைக்கு ஏற்ப பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான தினமாக இன்று 06ஆம் திகதி அனுஷ்டிக் கப்படவுள்ள அதேவேளை, அனைத்துப் பெண்களும் இணைந்து பாதுகாப்பான நாட்டை உருவாக்குவதே ஒன்றியத்தின் நோக்கமென ஒன்றியத்தின் தலைவி அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடியது.

இதில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமாலி வீரசேகர, நாடாளுமன்ற செயலாளர் நாயகமும், ஒன்றியத்தின் செயலாளருமான



குஷானி ரோஹனதீர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் புதிய தலைவியாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய குறிப்பிடுகையில், பொதுமக்களின் வாக்குகளால் குறிப்பிடத்தக்க வீதமான பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது சிறந்த வெற்றியாகும்.

எனவே, அரசியல் வேறுபாடுகள் இன்றி பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் செயற்பட வேண்டியது அவசியம் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஒன்றியத்தால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க இரு துணைத் தலைவர்கள் தலைமையில் உபகுழுவொன்று அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குறிஞ்சிப்பிட்டியில் திருத்தியமைக்கப்பட்ட வீதி விளக்குகள்



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி பகுதியில் கூடுதலான வீதி விளக்குகள் நீண்ட நாட்களாக பழுதடைந்து திருத்தப்படாமல் காணப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக கற்பிட்டி பிரதேச சபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், அவைகளுக்கான வாகன வசதிகளும் மின் குமிழ்களுக்கான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் குறிஞ்சிப்பிட்டி சமூக ஆர்வலர் ஏ.ஆர் ஜெஸ்பர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக குறிஞ்சிப்பிட்டி பகுதியில் பழுதடைந்த வீதி விளக்குகள் மாற்றியமைக்கப்பட்டன. கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மூலம் 15 புதிய மின் குமிழ்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் தனது சொந்த வாகனத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையின் பொறியியலாளரின் உதவியுடன் குறிஞ்சிப்பிட்டி பகுதியின் பழுதடைந்த மின் குமிழ்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக ஏ.ஆர். ஜெஸ்பர் தெரிவித்தார்.

## உடைத்த தேங்காயும் அதிக விலைக்கு விற்பனை



தற்போது பல பகுதிகளில் உடைத்த தேங்காயும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர். நுகர்வோர் அதிகார சபை திடீர் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டுவருகிறது.

இதன்படி, சில பகுதிகளில் உடைத்த தேங்காயின் ஒரு பகுதியின் விலையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேங்காய் ஒன்று தற்போது 200 ரூபாவுக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் உடைத்த தேங்காயின் ஒரு பகுதி 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## “றாபிதுஸ் ஸய்யிதாத்” பழைய மாணவிகள் ஒன்றுகூடல்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கல் எளிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியின் “றாபிததுஸ் ஸய்யிதாத்” பழைய மாணவிகள் அமைப்பின் பொதுக்கூட்டம் அண்மையில் திகாரியில் நடைபெற்றது.

பழைய மாணவிகள் அமைப்பின் இலக்குகளில் ஒன்றான “கல்லூரியின் தற்போதைய, பழைய மாணவிகள் அறிவு, திறன், பண்பாட்டு விருத்தியில் உயர் தரத்தை அடைவதற்கு பக்கபலமாக அமைதல்” என்பதை தொனிப் பொருளாகக் கொண்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாட்டின் நாலா பக்கங்களிலுமிருந்தும் சுமார் 600 பழைய மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். றாபிதாவின் உப தலைவி அல் ஆலிமா மஸிய்யா யஹ்யாவினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

அதனையடுத்து அல்ஆலிமா ஸுல்பிகார் ஜுனைத் தலைமை உரை நிகழ்த்தினார். “ஆலிமாக்களது கடமைகளும், பொறுப்புக்களும்” எனும் தலைப்பிலான சிறப்புரை றாபிதாவின் பிரதித் தலைவியும், கல்லூரியின் முன்னாள் அதிபருமான அல் ஆலிமா ஜெலீலா ஷபீக்கினால் நிகழ்த்தப்பட்டது.

## யானை - மனித மோதலை தடுக்க முகாமைத்துவ செயல்திட்டம்

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

வடமத்திய மாகாணத்தில் நிலவும் யானை – மனித மோதலை தடுப்பதற்கான முகாமைத்துவ செயல்திட்டம் தொடர்பில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு விளக்கமூட்டும் செயலமர்வு மாகாண சபை கூட்ட மண்டபத்தில் ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் நடைபெற்றது.

இந்த செயல்திட்டத்தின் முதலாவது கட்டமாக 07 பெரிய குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இரண்டாவது கட்டத்தில் 1500 சிறிய குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. களுகங்கை நீர்த்தேக்கத்தில் இருந்து மொரகாகந்த நீர்த்தேக்கம் வரை சுமார் 08 கி மீ நீளத்துக்கு உமா ஓயா வரை கால்வாய் அபிவிருத்தி செய்யப்படும். மொரகாகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து வவுனியா வரை கால்வாய் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் முதலாவது கட்டமாக மொரகாகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து யகல்ல வரை பயணிக்கும் 65 கி மீ கால்வாய் அபிவிருத்தி செய்யப்படும். யகல்ல வில் இருந்து மொரகாகந்த வரையான நீர்ப்பாசன குளங்களும் மேம்படுத்தப்படும்.

இதன் ஊடாக ஹுறுலுவெவ, ஏறுவெவ மான்னங்கட்டிய குளம், மகா கனந்தராவ, நுவரவெவ, திஸாவெவ உள்ளிட்ட ரஜரட்ட வில் பல குளங்கள் அபிவிருத்தி செய்யப்படும்.

யானை – மனித மோதலை தடுப்பதற்கு புதிய வனங்களை உருவாக்குதல் புதிய வன காப்பகங்களை உருவாக்குதல்.



வனவிலங்கு மண்டலம் மற்றும் யானை தடைகள் உருவாக்குதல். அவைகளை வில்பத்து மற்றும் மகாவலி வனப்பகுதிகளுடன் இணைத்தல். இது தவிர கால்நடை வளர்ப்பு, விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுத் தொழில்கள் மற்றும் புதிய தொழில் உருவாக்கல் என்பன ஏற்படுத்தப்படும்.

இந்த செயல்திட்டத்தின் மூலம் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி என்பன இதற்கு கிடைத்துள்ளன. வடமத்திய மாகாண கால்வாய் செயல்திட்ட பொறியாளர் பணிப்பாளர் செனவிரத்ன மற்றும் செயற்திட்ட பொறியியல் புதிய தொழில் உருவாக்கல் செனரத் மெண்டிஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

# கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா கொடியேற்ற விழா

பசுமைமிகுந்த இயற்கை அன்னையின் ஆர்ப்பரிப்போடு மிளிரும் கிழக்கு மாகாணத்தின் தென்முனையில் பரந்து விரிந்து கிடக்கும் கரையோரப் பிரதேசங்களின் முகவெற்றிலையாக திகழ்வது கல்முனை எனும் மாநகரமாகும். இங்கு தமிழர்கள், முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்து வருகின்றனர்.சொற்ப அளவில் சிங்களவர் வாழ்கின்றனர்.

பொதுவாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நகரத்திற்கும் மிக நீண்ட வரலாறுகளும் பாரம்பரியங்களும் உள்ளன. இவைகளை விட அப்பிரதேசங்களில் அதனை அடையாளம் காணும் விதத்தில் பிரதான வரலாற்றுச் சின்னமும் காணப்படும்.

இவ்வாறுதான் கல்முனை மாநகரத்திற்கும் அதில் அமைந்திருக்கும் பள்ளிவாசல்களுக்கும் பல சிறப்புகளும் மிக நீண்ட சுவாரசியமான வரலாறுகளும் நிறைந்து கிடக்கின்றன.அவ்வாறானதொரு

மதஸ்தலம் தான் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்கா சரீப் ஆகும்.இது கல்முனை மாநகர சபை மக்கள் பெற்ற ஒரு மாபெரும் வரலாற்று சிறப்பு மிக்க பொக்கிஷமுமாகும்.

கல்முனை நகரத்தின் கிழக்கே பரந்து விரிந்து கிடக்கும் இந்து சமுத்திரத்தின் வங்கக் கடலோரம் இப்பள்ளிவாசல் அமைந்துள்ளதால் இதனை எல்லோரும் கடற்கரை பள்ளிவாசல் என்று அழைக்கின்றனர். இப்பள்ளிவாசலுக்கு வரலாற்று ரீதியாக சிறப்பு புகழும் சேர்ப்பதுதான் இப்பள்ளிவாசலில் வருடாவருடம் நடாத்தப்படும் கொடியேற்ற விழாவும் கந்தூரியுமாகும்.

வருடாவருடம் ஜமாதுல் ஆகிர் முதலாவது பிறையுடன் ஆரம்பமாகும் இக்கொடியேற்ற விழாவானது சங்கைமிகு சாஹுல் ஹமீது வலியுள்ளாவின் வருடாந்த நினைவு வைபவமாகும்.

வழமைபோல் டிசம்பர் 02ம் திகதி திங்கட்கிழமை இப்பள்ளிவாசலின் 203ஆவது வருடாந்த கொடியேற்ற விழா ஆரம்பமாகியது. அண்மையில் அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்களை புரட்டி எடுத்த வெள்ளம் அதனையடுத்து ஏற்பட்ட 10 மரணங்களின்



பின்னணியில் இக்கொடியேற்றம் உணர்வு பூர்வமாக ஆரம்பித்துள்ளது.

உலகத்தில் மானிடர்களின் இருளகற்றி ஒளியூட்ட வந்த கண்மணி நபிகள் நாயகம் பெருமானார் (ஸல்) அலைகிவஸல்லம் அவர்களின் 23 ஆவது தலைமுறையில் செய்யது ஹசன் குத்தூஸ் செய்யது பாத்திமா தம்பதிகளுக்கு மகனாக ரபியுல் அவ்வல் மாதம் வெள்ளிக்கிழமை வட இந்தியாவின் மாணிக்கப்பூர் எனும் ஊரில் பிறந்தவர்கள்தான் சங்கைமிகு சாஹுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்கள்.

இஸ்லாத்தின் ஞான விளக்கத்தை பரந்த உலகின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச் சென்று மானிட நெஞ்சங்களில் இருள் அகற்றி ஒளி பெறச் செய்த பெருமை பல மகான்களை சாரும்.

தன்னலம் மறந்து மக்களுக்கு அறிவூட்டி தொண்டு செய்வதையே வாழ்க்கையின் இலட்சிய குறிக்கோளாகக் கொண்டு ஊண், உறக்கம் அற்று உற்றார் உறவினரை வெறுத்து இறைவனது வழிநடந்து தீனுடைய வாழ்க்கையில் ஆழ்த்த நினைத்து இறைதொண்டாற்றிய ஒரு பெரும் மகானே சங்கைமிகு சாகுல் ஹமீத் வலியுல்லாஹ் அவர்கள்.

அப் பெருமகான் அவர்கள் இறந்து பல ஆண்டுகள் சென்ற பின்னரும் அவர் செய்த இறைத் தொண்டின் பலனாக அவர்களது வாழ்க்கையும் வரலாறும் உலக மக்களுக்கு மிக உன்னதமான படிப்பினையும் முன்மாதிரியுமாகும்.

தனது எட்டாவது வயதிலேயே நாகூர் ஆண்டகை அல்குர்ஆனை ஓதி முடித்தார். அதன் பின்பு தனது இளம் வயதிலேயே இஸ்லாமிய நற்பணி நோக்கோடு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்றார்.

இவர்களின் ஆத்மீக சுற்றுலாவின் ஒரு பகுதியாக எமது இலங்கை நாட்டிற்கு வந்து தப்தர் ஜெய்லானி எனும் இடத்தை அடைந்தார்கள்.இலங்கையின் தென்பகுதி கரையை அடைந்த அவர்கள் புனித ஸ்தலங்களில் ஒன்றாகிய நபி ஆதம் (அலை) அவர்களின் பாதம் பட்ட இடத்தினையும் தரிசித்துவிட்டு தொடர்ந்தும் கரையோர பகுதியாகிய தென்கிழக்கு நோக்கி வந்தார்கள்.

அந்த சமயத்தில் கல்முனையில் வசித்தவர்கள்தான் மர்ஹூம் முஹம்மது தம்பிலெப்பை அவர்கள். இவர்கள் இஸ்லாமிய மார்க்கத்திலும் கல்வி ஞானத்திலும் ஈடுபாட்டுடன் செயல்பட்டார். உயர் பண்புடன் கூடிய ஒழுக்கச் சீலராக வாழ்ந்து வந்த இவர் இக்காலப்பகுதியில் கடுமையாக நோய்வாய்ப்பட்டார்.

கடும் நோயினால் அவஸ்தைப்பட்ட இவர்கள் கடலில் நீராடவும் சுத்தமான காற்றை சுவாசிக்கவும் கல்முனை கடற்கரை ஓரம் ஒரு குடிசையை அமைத்து வாழ்ந்து வந்தார். இவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டு இருந்த போதிலும் தமது அன்றாட மார்க்கக் கடமையை செய்துவரத் தவறவில்லை.



கடந்த 02ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

கால கிரமத்தில் ஒரு வெள்ளிக்கிழமை தமது இரவுத் தொழுகையின் பின் அயர்ந்து தூங்கிவிட்ட முஹம்மது தம்பிலெப்பை அவர்களின் கனவில் ஒரு வாட்டசாட்டமான மனிதர் பூரண சந்திரனை ஒத்த முகத்துடன் தலையில் பச்சை நிற தலைப்பாகையுடன் தோன்றி உமது குடிசையின் கிழக்கே சுமார் 100 யார் தூரத்தில் கடற்கரை மணல் குவித்து வைத்திருக்கிறேன். நீர் அவ்விடம் சென்று அடையாளம் இருக்குமிடத்தில் எனது நினைவாக ஒரு இல்லம் அமைத்து விடும். இன்றுடன் உம்மைப் பீடித்துள்ள நோயும் அகன்றுவிடும். என் பெயர் சாகுல் ஹமீத் என்று கூறி மறைந்து விட்டார்கள்.

கண்விழித்துப் பார்த்தபோது பொழுது புலர்ந்திருந்தது. அவர்களின் உடலில் இருந்த நோய் முற்றாக குணமாகி இருந்ததோடு நோய் இருந்தமைக்கான எவ்வித அடையாளமும் இருக்கவில்லை.

உடனே இறைவனைப் புகழ்ந்தவர்களாக குறிப்பிட்ட மண் குவியலைத்தேடிச் சென்று அருகில் இருந்த மரங்களை தறித்து கம்புகளைக் கொண்டு அவ்விடத்தில் பந்தல் ஒன்றினை அமைத்தார்கள்.

இச்சம்பவங்களை அன்றைய ஜும்ஆத் தொழுகையின் பின் பொதுமக்களிடம் தம்பிலெவ்வை அவர்கள் கூறினார்கள். பொதுமக்களும் அவ்விடம் வந்து அடையாள பொருட்களை கண்ணுற்றதோடு அவர்களின் நோயும் முற்றாக குணமாகி உள்ளதையும் அவதானித்தனர்.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற மக்கள் பந்தலை செப்பனிட்டு தர்ஹாவாக புனித மாற்றினர். சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் அவர்களின் பெயரில் மௌலூது ஓதி குர்ஆன் பாராயணம் செய்ததோடு அவர்களின் பெயரில் அன்னதானமும் வழங்கி சங்கைப்படுத்தினார்கள்.

சங்கைமிகு சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் அவர்களின் பெயரில் மக்கள் அதிக நம்பிக்கை கொண்டு தொடர்ந்தும் அவ்விடத்தில் கூடத்தொடங்கினர். இதனால் சங்கைமிகு சாஹுல் ஹமீது வலி நாயகம் அவர்கள் வபாத்தான ஜமாதுல் ஆகிர் மாதம் தலைப்பிறையுடன் இத்தர்ஹாவில் தொடர்ந்து 12 நாட்கள் அவர்களின் பெயரில் மௌலூது ஓதப்பட்டு பன்னிரெண்டாம் நாள் மாபெரும் கந்தூரி அன்னதானமும் கொடுக்கும் வழக்கம்.

இதுவே கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசலினதும் அதன் கொடியேற்ற பெருவிழாவினதும் பூர்வீக வரலாறாகும். இக்கொடியேற்றக் காலப்பகுதியில் தர்ஹாவில் தொடர்ந்து 12 நாட்கள் மார்க்க சொற்பொழிவுகள், மௌலூது மஜ்லிஸ், பக்கீர் ஜமாஅத்தினரின் ராத்திபு மஜ்லிஸ் என்பன சிறப்பாக நடைபெறும்.

இப்பள்ளிவாசலில் ஏழு அடுக்குகளைக் கொண்ட பிரமாண்டமான மினராவும் மூன்று அடுக்குகளைக் கொண்ட சிறிய மினரா ஒன்றும் கம்பீரமாக காட்சி தருகின்றது. முற்றாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள இத்தர்ஹாவில் மேலும் மூன்று சிறிய மினராக்களும் வானுயர்ந்து கம்பீரமாக காட்சி தருகின்றன. இவற்றில் தான் வருடாவருடம் கொடியேற்றப்படுகிறது இவ்விழாவானது கிழக்கிலங்கை இந்து, முஸ்லிம் மக்களினால் இன பேதமற்ற முறையில் கொண்டாடப்படுவதால் இரு சமூகங்களின் உறவுப் பலமாக இத்தர்ஹா திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை கடற்கரை எல்லையிலிருந்து 20 மீற்றர் எல்லையில் இருக்கும் இரு பெரிய சிறிய மீனராக்களும் கடல் எல்லையில் இருந்து 40 மீற்றர் எல்லையிலிருக்கும் அழகிய தர்காவும் சென்ற 2004-12-26 இல் ஏற்பட்ட கடல்கோள் பேரலைகளினால் தாக்கப்பட்ட போதிலும் இத்தர்ஹாவும் மினராக்களும் எவ்வித சேதங்களுமின்றி கம்பீரமாக இன்றும் காட்சி தருவது பேராச்சரியமாகும்.இது நாகூர் ஆண்டகை அவர்களின் பேரருளுமாகும்.

அன்மையில் கல்முனைக்குடி முகையதீன் ஜும்மா பெரிய பாள்ளிவாசல், கடற்கரைப் பள்ளி வாசல் நிர்வாகத்தை புதிய நிருவாக சபையினர் இந் நிகழ்வை மேலும் அர்த்தம் உள்ளதாக்கவும் சிறப்பிக்கவும் பல விஷேட ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இன்ஷா அல்லாஹ் வழமைபோல் இம்முறையும் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா சரீப்பின் கொடியேற்ற விழா வெற்றிகரமாக நிறைவுபெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

**முஹம்மட் முக்தார்**

# பயங்கரவாத தடைச் சட்டமும் வழிதவறும் அரசாங்கமும்!




**கனுஷியா புஷ்பகுமார்**

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு அதிகளவில் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம், ஊடக சுதந்திரம், போராடுவதற்கான சுதந்திரம் போன்றவை இதனால் முடக்கப்பட்டு வருகின்றன.

எனினும், கருத்து சுதந்திரம் எனக்கூறிக் கொண்டு தவறான விடயங்களை முன்வைப்பவர்களும் இல்லாமலில்லை. அவை ஒரு புறம் இருக்க, தற்போது நாட்டில் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் அதிகளவில் பேசப்பட்டு வருகிறது.

அதற்கான காரணம் அண்மையில் இடம்பெற்ற மாவீரர் நாள் தொடர்பில் உண்மைக்கு புறம்பான விடயங்களையும், புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தமைக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பல மனித உரிமை அமைப்புகளும் இதற்கு எதிராக குரல் எழுப்பி வந்தாலும், எந்தவொரு அரசாங்கமும் இதனை எதிர்க்கவில்லை. 1979ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அதனைவிட பாரதூரமான ஒரு சட்டத்தை கொண்டு வர நல்லாட்சி அரசாங்கம் முயற்சி செய்த போதிலும், கூட எதிர்க்கட்சிகள் வெளியிட்ட எதிர்ப்பு காரணமாக அது வெறும் உத்தேச சட்டமாகவே முன்வைக்கப்பட்டது.

எனினும், இந்த சட்ட த்தினால் நாட்டின் பல்லின மக்களும் பாதிக்கப்பட்டு வந்தாலும் அதிகளவில் தமிழ் மக்களே பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் இந்த சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டு இன்னமும் விடுதலை செய்யப்படாமல் உள்ளனர்.

2019ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்தப்பட்ட




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல முஸ்லிம்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட காலிமுகத்திடல் போராட்டத் தையடுத்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல சிங்கள மக்களும் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேசத்தில் மட்டுமன்றி உள்நாட்டிலும் அதிக விமர்சனங்களுக்கு உள்ளான சட்டமாக பயங்கரவாத தடைச்சட்டத்தை அடையாளப்படுத்தலாம்.

எனினும், பயங்கரவாதத்தில் ஈடுபடும் சந்தேக நபர்களைத் தவிர, அரசியல் எதிர்ப்பாளர்களை அடக்குவதற்கும் இனவாதம் அல்லது மத உணர்வு வெளிப்பாடுகளை ஒடுக்குவதற்கும் இலங்கையில் ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் இதைப் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதுதான் நிதர்சனமும் கூட.

பல அரசியல் தலைமைகளால் அவர்களின் தனிப்பட்ட நலனுக்காக கொண்டுவரப்பட்ட சட்டமூலங்க ளுள் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை உள்ளடக்க முடியும்.

தற்போது நாட்டை ஆட்சி செய்து வரும் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஒரு காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த அரசியல் கட்சியாக மிகவும் பிரபலமடைந்திருந்தது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னரும் கூட ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் மேடைகளில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாகவும் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். எனினும், தற்போது வரையில் குறித்த சட்டத்தின் படியே கைதுகள் இடம்பெற்றுள்ளன.

ஆகவே, அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக வழங்கியிருந்த வாக்குறுதியிலிருந்து நீங்க முயற்சித்தாலும் அதிலிருந்து நீங்க முடியாது.

பல வாக்குறுதிகளை வழங்கி பெரும்பான்மை மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசாங்கத்தால் அவர்களின் வாக்குறுதிகளை போலியாக்க முடியாது.

காரணம், மக்கள் அந்த வாக்குறுதிகளுக்காகவும், கொள்கைகளுக்காகவுமே தேசிய மக்கள் சக்தியை ஆட்சிபீடமேற்றினர்.

எனினும், நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்க பல சட்டங்கள் காணப்படுவதால் அதற்கு புதிதாக ஒரு சட்டம் அவசியம் இல்லை என்பதே சட்ட ஆலோசகர்களின் வாக்குவாதமாகவும் காணப்பட்டு வருகிறது.

பயங்கரவாத தடைச் சட்டம் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள், அரசியல் பழிவாங்கல் களுக்காக பழி தீர்க்கப்பட்டனர்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

“அரசாங்கத்தை விமர்சித்ததற்காக நாங்கள் யாரையும் கைது செய்யவில்லை. எங்களின் குறைகளை சுட்டிக் காட்டுங்கள். எங்களை விமர்சியுங்கள். அந்த சுதந்திரத்தில் தலையிட மாட்டோம், ஆனால் இனவாதத்தை தூண்டுவதை அனுமதிக்க முடியாது,” எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எவ்வாறாயினும், பயங்கரவாதத் தடைச் சட்டமானது மாற்றப்பட வேண்டும் என்பதில் நாட்டு மக்கள் உறுதியாகவே இருக்கிறார்கள். ஆனால், அதனை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக கொண்டுவரப்படுகின்ற சட்டம், பயங்கரவாத தடைச் சட்டத்தை விட, தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதென எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. உண்மையில், பயங்கரவாத தடைச் சட்டம் என்பது , மனிதாபிமானத்தையும் மனிதத்தையும் குழி தோண்டி புதைக்கும் சட்ட அங்கீகாரமாகவே பார்க்க முடிகின்றது.

# கட்சி பெயரில் மோசடிகளில் ஈடுபடுபவர்களை நீக்குவதற்கு எனக்கு அதிகாரம் உண்டு

## மொட்டுவின் யாழ்.அமைப்பாளர் தெரிவிப்பு



மொட்டு கட்சியின் பெயரை பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்று பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரை பயன்படுத்தி நிதி மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் அவ்வாறு பொய் கூறி வருபவர்களை நம்ப வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் விசாரணை நடத்தியது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த காலங்களில் நாமல் ராஜபக்ஷ வின் பெயரை பயன்படுத்தி காணி அபகரிப்பு,பயமுறுத்தல் போன்ற செயல்பாடுகளில் சிலர் ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு சென்று நாங்கள் விசாரிப்பது வழமை. அப்படி ஒரு வீட்டுக்கு சென்றமை தொடர்பாக தான் எனக்கு எதிராக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்று (04) விசாரணைகளை மேற்கொண்ட வேளை அவருக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கினோம் என்றார்.

நாங்கள் யாழ்ப்பாணத்தில் முழு நேர அரசியலில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறோம். கடந்த காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் தான் எமது கட்சியின் தோல்விக்கு காரணமாக அமைந்திருக்கிறது என நான் நினைக்கின்றேன் என்றார்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் 14 பேர் கைது



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 14 இராமேஸ்வர மீனவர்கள் (5) நேற்று அதிகாலை இலங்கை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் (4) காலை மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த நிலையில் தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இரண்டு இந்திய இழுவைப் படகுகளில் மீன் பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். கைது செய்யப்பட்ட மீனவர்களும்,இழுவைப் படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மீனவர்களை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ளனர்.

# சுற்றுச் சூழல் பாதுகாப்பு பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்

## மன்னார் அரச அதிபர்

(வாஸ் கூஞ்ஞ)



பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் கழிவுகளை கண்ட கண்ட இடங்களில் வீசி எறியாது அவற்றை உரிய இடத்தில் போடுவதை பாடசாலை மட்டங்களில் இருந்து பழக்கப்படுத்த வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யுஎன்டீபி நிறுவனத்தால் மன்னாரில் முன்னெடுக்கப்படும் சுற்றுசூழல் தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள் மீளாய்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்றபோதே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்

யுஎன்டிபி அமைப்பானது மன்னார் மாவட்டத்தில் ஆறு குழுக்களுக்கு நிதி வழங்கி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. சூழல் நேயத்தை முன்னிறுத்தி இத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. நாங்கள் முன்னெடுத்து செல்லுகின்ற எந்த அபிவிருத்தி திட்டமும் சூழலோடு சேர்ந்த திட்டமாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவை நிலைத்திருக்கும்.

சூழலுக்கு பொருத்தமான திட்டங்களை பிரதேச செயலாளர்களுடன் பங்குதாரர்களும் இணைந்து செயல்படுத்தும்போதுதான் அவைகள் சிறப்பாக அமையும்.

இங்கு முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்களை நோக்கும்போது மிகவும் பிரயோசனமானதாக இருக்கின்றது. ஆகவே அனைத்து பங்குத்தாரர்களும் உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.

# மோட்டார் சைக்கிள் மதிலில் மோதி ஒருவர் மரணம்-ஒருவர் படுகாயம்

## வட்டுக்கோட்டை சுழிபுரத்தில் சம்பவம்



வட்டுக்கோட்டை சுழிபுரம் சந்திக்கு அருகாமையில் நேற்று (05) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

இரு மாணவர்கள் நேற்று (05) தனியார் வகுப்பிற்கு செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மறந்துபோய் வீட்டில் விட்டுச் சென்ற பணத்தை எடுப்பதற்காக வீட்டுக்கு வேகமாக சென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிள் மதலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது இரண்டு மாணவர்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மற்றைய மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தொண்டமானாறு தடுப்பணையை திறக்கக்கோரி விவசாயிகள் போராட்டம்



யாழ்ப்பாணம், தொண்டமானாறு தடுப்பணையைத் திறந்து விட்டு தமது நெற் பயிர்களை அழிவில் இருந்து காப்பாற்றக் கோரி, தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி நாவற்காடு கிராம விவசாயிகள் நேற்று (05) வயலில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

தொண்டமானாறு தடுப்பணையை மூடி வைத்திருப்பதால் தென்மராட்சி வரணிப் பிரதேச வயல்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் வடிந்து செல்ல முடியாமல், வயல் நிலங்களில் தேங்கி பயிர்கள் அழிவடைவதாகவும் தெரிவிக்கின்றனர். விரக்தியடைந்த விவசாயிகள் குறித்த காரணத்தை சுட்டிக்காட்டி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# அவுஸ்திரேலிய அரசினால் பெண்களுக்கு நிவாரணம்

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதி உதவியில் கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அவசர உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

13 – 19 வயத்திற்குட்பட்ட பெண்களுள்

20– 45 வயத்திற்குட்பட்ட பெண்கள் என இரு பிரிவுகளாக விசேட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அதனடிப்படையில் கடந்த திங்கட்கிழமை தர்மபுரத்தில் 30 , கண்டாவளையில் 50 பேருக்கும் நிவாரணம் வழங்கி வைக்கப்பட்டன.

(03) ஆம் திகதி இரத்தினபுரத்தில் 50 பேருக்கும், ஸ்கந்தபுரத்தில் 30 பேருக்கும், பல்லவராயன்கட்டில் 35 பேருக்கும், நாச்சிக்குடாவில் 30 பேருக்கும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# தவறு செய்பவர்களை தட்டிக்கேட்க முடியாத நிலைமை

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் கவலை



தமிழர்களுக்கு உரித்தான பண்பாடு, கலாசாரம் என்பன தடம்மாறிச் செல்லும் அதேவேளை, தவறிழைப்பவர்களை தட்டிக்கேட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். இதேவேளை, எந்த நிறுவனத்தினதும், அமைப்பினதும் எழுச்சியும் வீழ்ச்சியும் அதன் தலைமைத்துவத்தின் ஆளுமையில்தான் தங்கியிருக்கின்றது என்பதற்கு திருமறைக் கலாமன்றம் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு என்றார். திருமறைக் கலாமன்றத்தின், வைரவிழா ஆண்டின் ஆரம்பம் கலைத்து கலையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் மேலும் உரையாற்றுகையில், திருமறைக் கலாமன்றத்தின் நிகழ்வுகளை நான் தவறவிடுவதில்லை. திருமறைக் கலாமன்றத்தின் எந்தவொரு நிகழ்வும் தரமானதாகவும் அதன் தனித்துவத்தை பறைசாற்றுவதாகவும் இருக்கும். திருமறைக் கலாமன்றத்தின் நிறுவுநர் மரியசேவியர் அடிகளாரின் ஆளுமையும் தலைமைத்துவப் பண்பும்தான், இந்த நிறுவனத்தின் எழுச்சிக்கு காரணம். மரியசேவியர் அடிகளாரின் நல்ல எண்ணமும், சிந்தனையும்தான் இந்த நிறுவனத்தை இன்று விரிவாக்கி வளர்த்துவிட்டிருக்கின்றது. நல்ல எண்ணத்துடனும் சிந்தனையுடனும் எதை ஆரம்பித்தாலும் அது வெற்றியிலேயே முடிவடையும். அதற்கு சிறப்பான உதாரணம் இது. இன்றைய எமது சமூகம் பண்பாடுகளை மறந்து போகின்றது. மனிதாபிமானம் என்பது இல்லாமல் போகின்றது. தமிழர்களுக்கு உரித்தான பண்பாடு, கலாசாரம் என்பன தடம்மாறிச் செல்லும் இந்தச் சூழலில் அதைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு திருமறைக் கலாமன்றம் போன்ற அமைப்புகளுக்கு உண்டு என குறிப்பிட்டார்.

# ஆறுமுக நாவலரின் 145ஆவது நினைவு தினம்





ஆறுமுக நாவலரின் 145ஆவது நினைவு தினம் நேற்று வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள நாவலரின் சிலையடியில் நகர சபை செயலாளர் அ. பாலகிருபன் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, ஆறுமுக நாவலரின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆறுமுக நாவலரின் பணிகள் தொடர்பில் நினைவுரைகளை பாடசாலை மாணவர்களும், தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் நிகழ்த்தினர். முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள், நகரசபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நாவலரின் சிலையானது முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் இலுப்பையடி தரிப்பிட சாரதிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மின் கம்பத்தில் மோதி பிக்கப் வாகனம் விபத்து



கொடிகாமம் – புலோலி பருத்தித்துறை பிரதான வீதி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (04) மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கை மின்சார சபையின் உயர் மின்னழுத்த மின் கம்பம் முறிந்து விழுந்ததில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக கொடிகாமத்தின் வரணி, எருவன், குடமியன் உள்ளிட்ட பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அதன் பின்னர் மின்சார சபையின் திருத்த பணியாளர்கள் மின் கம்பத்தை சீர்செய்ததுடன் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது

குறித்த வீதி ஊடாக கொடிகாமம் பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த டாடா பிக்கப் ரக வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட டிப்பர் ரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பிக்கப் வாகனத்தை மோதித்தள்ளியதன் காரணமாக குறித்த பிக்கப் உயர் மின்னழுத்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது மின் கம்பம் முறிந்து வீதியின் நடுவே சாய்ந்து விழுந்ததை அடுத்து மின் துண்டிப்பு இடம்பெற்றுள்ள நிலையில் தெய்வாதீனமாக எவருக்கும் எவ்வித பாதிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் ரக வாகனம் அங்கிருந்து தப்பிச்சென்றிருந்த நிலையில் கொடிகாமம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

800 ஏக்கர் நெற்பயிர் சேதம்

# விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பூநகர்-வளர்மதி விவசாய சம்மேளனம் , பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பூநகர்-வளர்மதி விவசாய சம்மேளனத்தின் கீழ் இம்முறை 2,000 ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 800 க்கும் மேற்பட்ட ஏக்கர் வேளாண்மைச் செய்கையானது மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடன்களைப் பெற்று வங்கிகளில் அடகு வைத்து பெரும்போக செய்கை மேற்கொண்டபோதிலும் வெள்ள அனர்த்தத்தினால் நெற்செய்கை



அழிவடைந்து பாதிப்படைந்துள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிருமி நாசினி விசிறப்பட்டு பசளைகள் விசிறப்பட்டும் மழை வெள்ளத்தினால் தமது வேளாண்மைச் செய்கை பாதிப்படைந்து விவசாயிகள் நஷ்டமடைந்துள்ள நிலையில் அரசாங்கம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வெருகல் -பூநகர் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மூதூரில் டெங்குக் கட்டுப்பாட்டு விசேட கூட்டம்



மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான டெங்கு கட்டுப்பாட்டு விசேட கூட்டம் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று (05) நடைபெற்றது. இவ்விசேட கூட்டம் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் அதிகளவு டெங்கு நோய் பரவுவதற்கான வாய்ப்பு இருப்பதோடு, இதுவரை மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 125 டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்த பின்னணியில் இவ் விசேட கூட்டம் நடைபெற்றது. நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அழித்தல், பிளாஸ்டிக் பொருட்களை அகற்றுதல், டெங்கு தொற்று தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையின் செயலாளர், மூதூர் சம்பூர் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், மூதூர் தள வைத்தியசாலை நிர்வாகத்தினர், மூதூர் பிரதேச அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கவிதைப் போட்டியில் முதலிடம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று வாழைச்சேனை பொதுசன நூலகம் "உலகை வென்றோர் வாசித்த மக்களே" எனும் தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவி எம்.எப்.ஸஹ்லா கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தெரிவித்தார். குறித்த போட்டியில் முதலிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்த மாணவி ஸஹ்லாவுக்கு அதிபர் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# வடிகான்கள் கட்டமைப்பு பணிகளை பார்வையிட்டார் ஆணையாளர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள மருதமுனையில் 65 மீற்றர் சுனாமி மீள்குடியேற்றக் கிராமத்தில், வெள்ள நீர் வழிந்தோடக் கூடிய வகையில், வடிகான்கள் அமைக்கப்பட்டு வரும் நிலையில், பணிகளை கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் பார்வையிட்டார்.

65 மீற்றர் சுனாமி மீள்குடியேற்றக் கிராம மக்கள், மழை காலங்களில் வெள்ள நீர் வழிந்தோட முடியாத நிலையில், பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்த வந்தனர். முறையான வடிகாலமைப்பு வசதிகளை மேற்கொண்டு, வெள்ளப் பாதிப்பில் இருந்து தம்மைப் பாதுகாத்துத் தருமாறு, இக் கிராம மக்கள் நீண்ட காலமாக கோரியிருந்த நிலையில், அவர்களது நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக, கல்முனை மாநகர சபையால், வடிகாலமைப்பு வசதிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இப் பணிகளைப் பார்வையிட்ட மாநகர ஆணையாளர்,



துரித கதியில் வேலைத்திட்டத்தை நிறைவு செய்யுமாறு, உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபை தமது பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தந்திருப்பதையிட்டு இக் கிராம மக்களும் நலன் விரும்பிகளும் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளனர்.

# தேசிய கல்வியாளர் விருது பெற்றார் கலாநிதி ஷிப்லி

(சுலைமான் றாபி)





இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம் (Sri Lanka Institute of Information Technology) கல்வி அமைச்சுடன் இணைந்து, கல்வித் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய கல்வியாளர்களை ஆண்டுதோறும் கௌரவித்து வருவது வழக்கம். அந்த வகையில் இவ்வருடம் கல்வி மற்றும் உயர்கல்வி என இரு பிரிவுகளிலும் சிறந்து விளங்கிய பல கல்வியாளர்கள் தேசிய கல்வியாளர் விருதுடன் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு, உயர்கல்வித் துறையில் கணினியியல் (Computing) கற்கைகளுக்காக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழிநுட்ப சிரேஷ்ட விரிவுரையாளர் நிந்தவூரைச் சேர்ந்த கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி, தேசிய கல்வியாளர் விருது பெற்றுள்ளார். இந்த விருதானது கொழும்பு மொனார்ச் இம்பீரியல் ஹோட்டலில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில், பேராசிரியர் ராகல் பேராதனை பல்கலைகழகம்) மற்றும் பேராசிரியர் ராமநாதன் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரும் கணினியியல் துறையில் சிறப்பான பங்களிப்புகளுக்காக தேசிய கல்வியாளர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

குறித்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக நியூசிலாந்துக்கான இலங்கை தூதுவர் டேவிட் பைன் மற்றும் சிறப்பு அதிதியாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு









(றியாஸ் ஆதம்)

ஏறாவூர் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் 100 குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ்.சுபைர் அஸீஸா பவுண்டேஷன் பணிப்பாளர் சாதிக் ஹசனிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அந்த அமைப்பு 7500 ரூபா பெறுமதியான 100 பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளை வழங்கியது. குறித்த பாடசாலை உபகரணங்களை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (04) ஏறாவூர் அல் ஜிப்ரியா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் அஸீஸா பவுண்டேஷன் பணிப்பாளர் அஷ்ஷேஹ் சாதிக் ஹசன் உள்ளிட்ட அதிதிகள் பலரும் கலந்துகொண்டு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# முதலைகள், பாம்புகளின் பெருக்கம் அதிகரிப்பு

(முகம்மட் முக்தார்)

அண்மைய வெள்ளத்தின் பின்னர் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்திலுள்ள ஆறுகள், குளங்களில் முதலைகள், பாம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

களியோடை ஆறு, குறுணக்கல் கஞ்சி ஆறு, கரைவாகு ஆறு, நெய்னாகாடு ஆறு, கல்லரிச்சல் ஆறு ஆகியவற்றில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன், பாம்புகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளன.

இந்த நிலைமை காரணமாக விவசாயிகள், ஆற்றங்கரைகளில் நீராடுவோர், கால்நடைகள் என்பனவற்றுக்கு இவற்றால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது . இரவுநேரங்களில் இம்முதலைகள் ஆறுகளை விட்டு வெளியேறி சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி மீள்குடியேற்ற வீட்டுத்திட்டம், கல்முனை கிறீன்பீல்ட் மீள்குடியேற்றம், மருதமுனை பிரான்ஸ் சிட்டி வீட்டுத்திட்டம், பாண்டிருப்பு வீட்டுத்திட்டம், நூறவந்திய மேடு போன்ற பகுதிகளில் நடமாடுவதால் மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்கின்றனர். இரவு நேரங்களில் இங்கு அவை சுதந்திரமாக நடமாடுகின்றன.பாரிய நீர்த்தேக்கங்கள், ஆறுகள், காடுகள் என்பவற்றின் ஊடாக வெள்ளநீர் வெளியேறியமையால் அதில் அள்ளுண்டு வந்த முதலைகளும், பாம்புகளுமே இவ்வாறு பொதுமக்களை அச்சுறுத்தி வருகின்றன.

இவற்றை வனவிலங்கு அதிகாரிகள் பிடித்துச் செல்ல வேண்டுமெனவும் இதன் மூலம் மக்களை பாதுகாக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றனர்.

# தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கைகள் தொடர்பான செயலமர்வு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பில் அரச நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கைகள் தொடர்பான செயலமர்வு கல்லடி தனியார் விடுதியில் புதனன்று (4) நடைபெற்றது.

சேர்ற் (CERT) நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திலின திஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜலேகா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பொது நிர்வாக அமைச்சகம், இலங்கை சேர்ற் நிறுவனமும் இணைந்து அரச நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கைகள் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கின.

இலங்கை தேசிய இணைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கணினி அவசர தயார்நிலைக் குழுவாக சேர்ற் நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

அடுத்த வருடம் அரச நிறுவனங்களில் நவீன டிஜிட்டல் மயமாக்கலின் உதவியுடன் புதிய செயலிகள் மூலம் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் நம்பகமான இணைய பாதுகாப்புச் சூழலை உருவாக்குவதன் மூலம் சிறந்த சேவையை மக்களுக்கு



வழங்க முடியும் என நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டத்தில் துறைசார் உத்தியோகத்தர்களுக்கு தகவல் பாதுகாப்பு தொடர்பான அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கு எதிர்காலத்தில் செயலமர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷனி சிறிகாந்த், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் துறைசார் நிபுணர்கள் என பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சொத்து - உயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்

## நாடாளுமன்றத்தில் ரிஷாட் எம்.பி பிரேரணை சமர்ப்பிப்பு

வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சொத்து – உயிர்ச்சேதம் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தினால் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், அனர்த்த நிலைமைகள் தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்தில் (04) நேற்று முன்தினம் முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது

கடந்த சில நாட்களுக்கு முன்னர், வங்கக்கடலில் ஏற்பட்ட "பெங்கல்" சூறாவளி காரணமாக, நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட சுமார் 24 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டன. இந்த இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்து 75 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இது சமீபகால வரலாற்றில் பதிவான மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் ஆகும்.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் நெற்செய்கை உட்பட உணவுப் பயிர்கள் மற்றும் பாரிய விவசாய நிலங்களும் சேதமாகியுள்ளன. விவசாயத்தை தங்களின் வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிகள், இதன் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மோசமான இந்த காலநிலையால், 17 உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று, நிந்தவூர், மத்ரஸாவைச் சேர்ந்த 11 மாணவர்கள் பயணித்த உழவு இயந்திரம், காரைதீவு – மாவடிப்பள்ளி பாலத்திற்கருகில் விபத்துக்குள்ளானதில், எட்டு உயிர்கள் பலியாகின.

இந்த விடயத்தில், பொலிஸாரும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளும் சிறுபிள்ளைத்தனமாக செயற்பட்டிருக்கின்றார்கள். மேலும், இந்த சம்பவம் இடம்பெற்றபோது, அங்கிருந்தவர்கள் பிள்ளைகளை காப்பாற்றித் தருமாறு கூக்குரலிட்டுள்ள போதும், அங்கு நின்றிருந்த பொலிஸார், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்து, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துள்ளனர்.



அதுமட்டுமின்றி, இவ்வாறானதொரு அனர்த்தம் நிகழும் பட்சத்தில், அவர்களைக் காப்பாற்ற வேண்டிய அவசர நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், அங்கு வருகை தந்த பொலிஸார், பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு அளிக்குமாறு கூறியிருக்கின்றார்கள். பொலிஸ் நிலையத்திற்குச் சென்றும் கூட, ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக முறைப்பாடு செய்வதற்கு காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், மறுதினம் குறித்த மத்ஸரா அதிபரையும் ஒரு சிலரையும் சிறைக்கு அனுப்பும் வேலையை செய்திருக்கின்றார்கள். மரணம் என்பது இறைவனின் நாட்டப்படி நிகழ்வது. என்றாலும், இவ்வாறான ஆபத்துக்களை தடுக்க வேண்டிய பொறுப்பு, அரசாங்கத்துக்கு, அதிகாரிகளுக்கு, மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நம் அனைவருக்கும் இருக்கின்றது.

எனவே, இனிமேலும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கான, முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அத்துடன், இந்த சம்பவத்திற்குப் பின்னால் உள்ள அதிகாரிகள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமானத்துடன் அவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார்.

# கண்டி மாவட்ட செயலாளராக இந்திக்க உடவத்த நியமனம்

(எம்.ஏ.அமீனுல்லா)



இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் இந்திக்க உடவத்த கண்டி மாவட்ட செயலாளராக நேற்று (05) கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 02ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கண்டி மாவட்டச் செயலாளர் பதவிக்கு இவரை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் ஓய்வு பெற்றதையடுத்து கண்டி மாவட்ட செயலாளர் பதவி வெற்றிடமானதை தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியான இந்திக்க உடவத்த, களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

# இறக்குவானை மாதம்பை பகுதியில் துப்பாக்கி தயாரித்த ஒருவர் கைது

## விசேட அதிரடிப்படையினர் முற்றுகை





இறக்குவானை பொலிஸ் பிரிவில் மாதம்பை பகுதி தோட்டத்தில் ஆயுதம் தாயாரித்த களஞ்சியசாலை ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியதோடு ஒருவரை கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் கட்டளை தளபதியின் உத்தரவுக்கமைய, ஹம்பாந்தோட்டை பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்தி விஜேசிங்கவின் பணிப்புரையின் கீழ், கஹவத்த விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின்படி, கஹவத்த முகாமின் கட்டளைத் தளபதி, பொலிஸ் பரிசோதகர் எல்.என்.டி. மொல்லிகொடவின் மேற்பார்வையின் கீழ், குழுவொன்று, இறக்குவானை பொலிஸ் பிரிவில் இலக்கம் 203ஃ எல், மாதம்பே, நோரொக்கான தோட்டத்தில் சுற்றிவளைப்பு சோதனையில் ஈடுபட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளை தயாரித்து வந்த மாதம்பே பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக இறக்குவானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



சப்ரகமுவ மாகாணத்தின் விசேட தேவையுடையவர்களின் கலை நிகழ்வு செவ்வாய்க்கிழமை (3) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற சப்ரகமுவ மாகாணத்தில் விசேட தேவையுடையவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள் : சிவா ஸ்ரீதரராவ்)

# கண்டியில் தரம்குறைந்த மஞ்சள் தூள் விற்பனை

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தகவல்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாவட்டத்தில் சில கடைகளில் விற்பனைக்கு வரும் கருவாடு மற்றும் மஞ்சள் தூள் ஆகியவை மிகவும் தரம்குறைந்ததாக உள்ளதாக கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால், 62 மஞ்சள் தூள் மாதிரிகள் மற்றும் 61 கருவாடு மாதிரிகள் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பியதன் மூலம் பெறப்பட்ட அறிக்கையின்படி, 61.3% மஞ்சள் தூள் மற்றும் 59% கருவாடு மாதிரிகள் தரம் குறைந்தவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

62 மஞ்சள் மாதிரிகளில் 38 மாதிரிகளும், கருவாட்டின் 61 மாதிரிகளில் 36 மாதிரிகளும் தரம் குறைந்தவை என கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தரம் குறைந்த மஞ்சள் தூள் மற்றும் கருவாடு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், நிலைமை மிகவும் மோசமாக உள்ளதால், இது தொடர்பில் பொதுவான நடவடிக்கை எடுப்பதற்காக கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு உரிய தரவுகளை அனுப்ப சுகாதார திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# வடக்கிலுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவிப்பு

(எஸ்.பி.கே.கஜி)

வடக்கு மாகாணத்தில் வடிகான்களை மறித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்தமையைத் தொடர்ந்து அதிகளவிலான தகவல்கள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றை உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி அவர்கள் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியிருக்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

கடந்த மாதம் இடம்பெற்ற வெள்ள இடர் தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்களப் பணியாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் தொடர்ந்துரையாற்றுகையில்

நாம் எவ்வாறான தயார்படுத்தல்களுடன் இருந்தாலும் இடர்கள் வரும்போது சில வேளைகளில் அவற்றைச் சமாளிக்க முடியாத



நிலைமை ஏற்படும். 4 நாள்களில் சுமார் 500 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றது. சகல இடங்களும் வெள்ளக்காடாகியது. ஆனாலும், சில நாட்களிலேயே வழமைக்கு திரும்பும் வகையில் நீங்கள் அனைவரும் பணியாற்றியிருக்கின்றீர்கள்.

சவால்களை நாம் சந்திக்கும் போதுதான் எமது சேவைகள் இன்னமும் மேம்படும்.

இந்த இடரிலிருந்து நாங்கள் கற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் எமது நடவடிக்கைகளை இப்போதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். நாம் அவற்றை மீளாய்வு செய்யவேண்டும்.

சரியான தீர்மானங்களை விரைந்து எடுக்க வேண்டும் என்றார்.

ஒவ்வொரு ஆண்டும் பருவகால மழைக்கு முன்னதாக வெள்ள வடிகான்களை துப்புரவு செய்வதை எமது வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்குவதன் ஊடாக முன்னாயத்த நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுக்கலாம் என்றார்.

# நாடளாவிய ரீதியில் 4 நாட்களில் 321 டெங்கு நோயாளர்கள்

நாடளாவிய ரீதியில் கடந்த 4 நாட்களில் மாத்திரம் 321 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் நவம்பர் மாதத்தில் மட்டும் 3178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும் 20 டெங்கு அபாயப் பகுதிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை குறைவடைந்துள்ள நிலையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் பதிவாகும் அபாயம் காணப்படுவதாக சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடிதுவக்கு தெரிவித்தள்ளார்.



# காதலன் தாக்கியதில் காதலி மரணம்

காதலர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் காதலன் தாக்கியதில் காதலி மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காதல் உறவை முறித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது காதலன் தடியால் தலையில் தாக்கியதில் காதலி நேற்று (05) உயிரிழந்துள்ளதாக ஸ்ரீபாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி கிலிமலே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதி சந்தேக நபரிடம் நீண்ட நாட்களாக காதல் உறவில் இருந்துள்ளார். நேற்று முன்தினம் (04) இருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கோபமடைந்த காதலன் தனது காதலியை தடியால் தாக்கியுள்ளார். தாக்குதலால் படுகாயமடைந்த காதலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# உலகின் மோசமான விமான நிறுவனங்களின் பட்டியல் வெளியானது; விமான நிறுவனங்கள் அதிர்ச்சி

ஐரோப்பிய ஒன்றிய உரிமைகோரல் செயலாக்க நிறுவனமான ஏர்ஹெல்ப் (Air Help) நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அண்மைய ஆய்வில், 109 உலகளாவிய விமான நிறுவனங்களில் இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான இண்டிகோ (IndiGo) 103வது இடத்தைப் பிடித்துள்ளது.

குறைந்த கட்டண விமான நிறுவனமான இண்டிகோ இந்த ஆண்டு உலகின் மோசமான விமான நிறுவனங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது என்ற அறிக்கையின் கண்டுபிடிப்புகளை கடந்த புதன்கிழமை முற்றிலும் நிராகரித்துள்ளது. மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கு சரியான நேரத்தில்,மலிவு, மரியாதையான மற்றும் தொந்தரவு இல்லாத பயண அனுபவத்தை வழங்குவதாக வலியுறுத்தியுள்ளமை குறிப்படத்தக்கது.

நேரமுகாமைத்துவம், வாடிக்கையாளர் கருத்து, உரிமைகோரல் மற்றும் இழப்பீட்டு செயலாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மதிப்பீடுகளை ஏர்ஹெல்ப் நிறுவனம் மேற்கொண்டது. தரவரிசைப்படுத்தியதில் ஏர்ஹெல்ப் அதன் அறிக்கையில் இண்டிகோவுக்கு 4.80 மதிப்பெண்களை வழங்கியது. பட்டியலில் உள்ள 109 விமான நிறுவனங்களில் 103 ஆவது இடத்தை இண்டிகோ பிடித்தது. தரவரிசையில் உள்ள மற்றைய இந்திய விமான நிறுவனமான ஏர் இந்தியா 6.15 மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் 61வது இடத்தைப் பிடித்தது. அதேநேரம் பிரஸ்ஸல்ஸ் ஏர்லைன்ஸ் 8.12 புள்ளிகளுடன் முதலிடத்திலும் கட்டார் ஏர்வேஸ் 8.11 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் மற்றும் யுனைடெட் ஏர்லைன்ஸ் 8.04 புள்ளிகளுடன் மூன்றாவதும் இடத்திலும் உள்ளன.

இந்தியாவின் மிகவும் விருப்பமான விமான நிறுவனமாக இண்டிகோ இந்த கணக்கெடுப்பினை மறுத்துள்ளது. இண்டிகோவின் உள்நாட்டு சந்தைப் பங்கு 60 சதவீதத்தைத் தாண்டியுள்ளது மற்றும் 2023 ஆம் ஆண்டில் விமான நிறுவனம் 100 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளைக் கொண்டு சென்றது. 380 இற்கும் மேற்பட்ட விமானங்களைக் கொண்ட விமான நிறுவனமாகவும் தினசரி சுமார் 2,100 விமானங்களை இயக்குகிறது மற்றும் 85 உள்நாட்டு இடங்களுக்கும் 30 இற்கும் மேற்பட்ட சர்வதேச இடங்களுக்கு இணைக்கிறது எனவும் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து பணியகமும் (DGCA) இண்டிகோவின் கூற்றுகளை ஆதரிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



இண்டிகோ 10,000 பயணிகளுக்கு வெறும் 0.2 சதம் முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்துள்ளதாக ஒக்டோபர் மாத விமானப் போக்குவரத்து அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது என்பதோடு இது நாட்டிலேயே குறைவான முறைப்பாடு அளிக்கப்பட்ட விமான நிறுவனங்களில் ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விண்வெளி வீரர்களை மீட்க பாரிய அளவிலான பணப்பரிசு; நாசா விடுத்துள்ள அழைப்பு

விண்வெளி வீரர்களை மீட்டு வர நல்ல ஆலோசனை தெரிவிக்கும்படி விஞ்ஞானிகளுக்கு நாசா அழைப்பு விடுத்துள்ளதுடன் சிறப்பான திட்டத்திற்கு பல இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில் பல்வேறு ஆய்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. வீரர்களை விண்வெளிக்கு அனுப்பி வைக்கும் போது பல்வேறு சிக்கல்களை நாசா எதிர்கொள்கிறது.

தற்போதும் கூட விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட இருவரை உடனடியாக மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களை மீட்பதற்கான ஏற்பாடுகளை நாசா செய்திருக்கிறது. எனினும் இதுபோன்ற சிக்கல்கள் எதிர்கால திட்டங்களிலும் ஏற்படலாம் என்று நாசா கருதுகிறது.

குறிப்பாக நிலவில் கரடுமுரடான நிலப்பரப்பில் விண்வெளி வீரர்கள் சிக்கித் தவிக்கும் பட்சத்தில் அவர்களை மீட்பதற்கான சிறப்பான திட்டங்களை விஞ்ஞானிகளிடமிருந்து நாசா வரவேற்கிறது. இதற்கென சந்திர மீட்பு அமைப்பு என்ற பெயரில் நாசா இணையதளம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் வரும் 2025ம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி வரை தங்களது புதுமை திட்டத்தை சமர்ப்பிக்கலாம். தேர்வு செய்யப்படும் சிறப்பான திட்டத்திற்கு இந்திய மதிப்பில் பல இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும் என்றும் நாசா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூட்டான் மன்னரும் ராணியும் புது டில்லி விஜயம்





பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நம்கெல் வாங்சுக் மற்றும் ராணி ஜெட்சன் பெமா வாங்சுக் ஆகியோர் இரண்டு நாள் அதிகாரப்பூர்வ பயணமாக நேற்று புதுடில்லி சென்றுள்ளனர். அவர்களை டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வரவேற்றார்.

பூட்டான் மன்னரின் இந்தியப் பயணம் இரு நாடுகளுக்குள்ளும் "தனித்துவமான நட்புறவை" மேலும் வலுப்படுத்தும் என்று ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

எக்ஸ் வலைத்தள பதிவில், ஜெய்சங்கர், இன்று புதுடில்லிக்கு வருகை தந்துள்ள பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக்கை வரவேற்பதில் பெருமையடைகிறேன். அவரது வருகை நமது தனித்துவமான நட்புறவை மேலும் வலுப்படுத்தும்" என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூட்டான் அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளுடன் பூட்டான் மன்னர் பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பார் என்று வெளியுறவு அமைச்சகம் (MEA) தெரிவித்துள்ளது.

இந்தியாவும் பூட்டானும் தனித்துவமான நட்பு மற்றும் ஒத்துழைப்பை அனுபவிக்கின்றன, அவை பரஸ்பர புரிதல் மற்றும் நம்பிக்கையால் நிலைநிறுத் தப்பட்டுள்ளன. இந்த வருகை இருதரப்பு ஒத்துழைப்பின் முழு வரம்பையும் மறுபரிசீலனை செய்வதற்கும் மேலும் முன்னேற்றுவதற்கும் இரு தரப்புக்கும் வாய்ப்பளிக்கும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற 29 ஆவது இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) கூட்டாண்மை உச்சி மாநாடு 2024 இன் தொடக்க அமர்வில் டோர்ஜி, பூட்டானுக்கு இந்தியா ஆதரவு மற்றும் உத்வேகத்தினை அளிக்கும் என்று பாராட்டினார். இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நம்பிக்கை மற்றும் பகிர்வு இந்தியாவை பூட்டானின் அபிலாஷைகளை செயல்படுத்தும் நாடாக மாற்றுகின்றது என கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# "புஷ்பா 2" திரையிடல்: நெரிசலில் தாய் உயிரிழப்பு; மகன் காயம்

ஹைதராபாத்தில் திரையரங்கில் புதன்கிழமை மாலை "புஷ்பா 2" படத்தின் சிறப்பு காட்சியை பார்க்கச் சென்ற 35 வயதுடைய பெண்ணொருவர் நெரிசலில் சிக்கி உயிரிழந்துள்ளார். மேலும், அவரது ஒன்பது வயதுடைய மகன் பலத்த காயமடைந்துள்ளதாக ஹைதராபாத் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் "புஷ்பா 2" படத்தின் சிறப்பு காட்சிக்காக வருகை தந்திருந்த தெலுங்கு முன்னணி நடிகர் அல்லு அர்ஜுனைப் பார்க்க ஏராளமான மக்கள் கூட்டம் அலை மோதியமையினால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



திரையிடலுக்கு இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்துடன் வந்திருந்த நடிகரைக் காண இரசிகர்கள் குவிந்ததால் திரையரங்குக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான இரசிகர்கள் அணி நடிகரைக் காண அணி திரண்டனர். ஒருகட்டத்தில் கூட்டத்தை சமாளிக்க முடியாமல் போன நிலையில், பொலிஸார் தடியடி நடத்தியதால் பயங்கர நெரிசல் ஏற்பட்டது.

இந்த நெரிசலில் சிக்கி ரேவதி என்ற 39 வயது பெண் பரிதாபமாக உயிரிழந்தார். அத்துடன் அவரது மகன் உள்ளிட்ட 2 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட திரையரங்க நிர்வாகம் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் கழிவுநீர் கலந்த குடிநீரை அருந்திய மூவர் உயிரிழப்பு

சென்னை பல்லாவரம், ஆலந்தூர் பகுதிகளில் மாநகராட்சி குழாயில் வந்த குடிநீரை குடித்த 30 இற்கும் மேற்பட்ட நபர்களில் மூவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

கழிவுநீர் கலந்த குடிநீரை அருந்தியதனால் தான் உடல்நல கோளாறு ஏற்பட்டதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

"தாம்பரம் மாநகராட்சி 13-வது வார்டில் கழிவுநீர் கலந்த குடிநீரை அருந்தியதில் 3 நபர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. குடிநீர் என்பது மிக அடிப்படையான ஒன்று அதனை மிகுந்த கவனத்துடன் விநியோகிக்க வேண்டியது அரசின் கடமை. புயல் கரையைக் கடந்ததும், குடிநீர், கழிவுநீர் குழாய்கள் இடையே எவ்வித கலப்பும் இன்றி முறையாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறதா? என்பதை அரசு உறுதிசெய்திருக்க வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் மிஷேல் தோல்வி

## மூன்று மாதத்தில் கவிழ்ந்தது பிரான்ஸ் அரசு



பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் அந்நாட்டு அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றது. இதனால், பதவியேற்று மூன்றே மாதத்தில் மிஷேல் பார்னியர் பதவியிழந்துள்ளார். பிரான்ஸ் வரலாற்றில் 60 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு பிரதமரின் ஆட்சி வாக்கெடுப்பின் மூலம் கவிழ்க்கப்பட்டுள்ளது. மேலும், 91 நாட்கள் மட்டுமே பிரதமராக இருந்துள்ளார். அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் இத்தகைய குறுகிய காலத்தில் பிரதமர் பதவியை இழந்தவராக மிஷேல் பார்னியர் அறியப்படுகிறார்.

பிரான்சில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், நாடாளுமன்றத்துக்கான தேர்தலை முன்கூட்டியே நடத்தியிருந்தார். இத்தேர்தலில், மெக்ரோன மையவாத கூட்டணி, இடதுசாரிகள் கூட்டணி, அதிதீவிர வலதுசாரிகள் கூட்டணி ஆகியவை போட்டியிட்டன. இதில் அதிதீவிர வலதுசாரிகளின் தேசிய பேரணி கட்சி வெற்றி பெற்றது. இந்தக் கட்சிக்கு பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோனின் ஆதரவும் இருந்தபோதிலும் பெரும்பான்மை இல்லாத அரசாங்கமாக அக்கட்சி ஆட்சியமைக்க முடிந்தது. இதனையடுத்து பிரான் ஸின் புதிய பிரதமராக மிஷேல் பார்னியர் தேர்வு செய்யப்பட்டார். ஆனாலும் மிஷேல் பார்னியர் தெரிவு செய்யப்பட்டமைக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு போராட்டங்களும் நடைபெற்றன.

**சர்ச்சைக்கு வழிவகுத்த வரவு செலவுத்திட்டம்:** பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் பிரதமர் மிஷேல் பார்னியேர் 2025-ஆம் ஆண்டுக்கான சமூக பாதுகாப்பு வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்திருந்தார். இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனாலும் ஜனாதிபதியின் ஆதரவு இருப்பதால் அவரின் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி வரவு செலவுத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவேன் என மிஷேல் பார்னியேர் கூறியிருந்தார்.

இதனால், பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் பிரதமர் மிஷேல் பார்னியேருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் மிஷேல் பார்னியர் தோல்வியடைந்தார். மொத்தமுள்ள 577 உறுப்பினர்களில் 331 பேர் அரசுக்கு எதிராக வாக்களித்தனர். இந்த தோல்வியைத் தொடர்ந்து பிரதமர் தமது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவைத் தொடர்ந்து ஜனாதிபதியையும் பதவி விலக வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் வலுபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் பெண்கள் மருத்துவம் கற்பதற்குத் தடை

## ரஷித் கான் வேதனை

தெற்காசிய நாடான ஆப்கானிஸ் தானில், 2021 முதல் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. இங்கு, பெண்கள் சிறுமிகளுக்கு ஆடை கட்டு ப்பாடுகள், கல்வி கற்க, வேலைக்குச் செல்லத் தடை, பொது இடங்களுக்கு ஆண்களின் துணை இல்லாமல் செல்லவும் உள்ளிட்ட பல்வேறு கட்டு ப்பாடுகளை தலிபான் அரசு விதித்து வருகிறது. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் தாதியர் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளை பெண்கள் பயில தாலிபான் அரசு தடை விதித்துள்ளது. இந்த தடைக்கு அந்நாட்டு கிரிக்கெட் வீரர் ரஷித் கான் வருத்தம் தெரிவித்துள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "கற்றலின் முக்கியத் துவத்தை குர்ஆன் வலியுறுத்துகிறது. ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கான கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்கள் அண்மையில் மூடப்பட்டதை ஆழ்ந்த வருத்தத்துடனும் ஏமாற்றத்துடனும் பார்க்கிறேன். இந்த முடிவு பெண்க ளின் எதிர்காலத்தை மட்டுமல்ல, நமது சமூகத்தின் கட்டமைப்பையும் கடுமையாக பாதித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் பெண் மருத்துவர்கள் மற்றும் தாதிய உத வியாளர்களுக்கான கடுமையான பற்றாக்குறையானது பெண்களின் உடல்நலம் மற்றும் கண்ணியத்தை நேரடியாக பாதித்துள்ளது என ரசித்த கான் தனது பதிவில் தெரிவித் துள்ளார்.

## கவர்ச்சி படங்களால் தினமும் 1 கோடி சம்பாதிக்கும் இளம்பெண்





20 வயதில் கல்லூரியில் படிக்கும் ஒரு அமெரிக்க இளம்பெண், கவர்ச்சி படங்களை வெளியிட்டு நடிகைகளைவிட அதிகமாக சம்பாதித்து வருகிறார்.

புளோரிடா மாகாணத்தை சேர்ந்த சோபி ரெயின் எனும் அந்தப் பெண், கடந்த சில மாதங்களாக, வயது வந்தோருக்கான வலைத்தள பக்கத்தில் கவர்ச்சியான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார். தனது இன்ஸ்டாகிராம், டிக்டாக் பக்கங்களிலும் இதுபோன்ற பதிவுகளை வெளியிட்டு வருகிறார். இதன் மூலம் ஓராண்டிற்கு உள்ளாகவே ரூ.364 (இந்திய மதிப்பில்) கோடி சம்பாதித்து இருக்கிறார். அதாவது ஒரு நாளைக்கு ரூ.1 கோடி (இந்திய மதிப்பில்) முதல் ரூ.2 கோடி வரை வருவாய் ஈட்டி இருக்கிறார்.

டிக்டாக் வலைத்தள பக்கத்தில் அவர் மழையில் நடனமாடும் வீடியோவை மட்டும் இதுவரை சுமார் 10 கோடி பேர் ரசித்து உள்ளனர். சமீபத்தில் பிரபல இணைய இதழ் ஒன்றிற்கு பேட்டி அளித்த அவர், "என்னை விபசாரி என்று அழைக்கிறார்கள்.

ஆனால் நான் யாருடனும் உறவு வைத்துக் கொள்ளாத கன்னிப்பெண். ஆழமான மத நம்பிக்கை கொண்டவள். எனது புகைப்படங்களால் எனது பெற்றோரின் கடன்களை அடைத்துவிட்டேன். ரசிகர்களுக்கு நன்றி.

நீங்கள் என்ன பேசிக்கொண்டாலும், நான் மகிழ்ச்சியாக வங்கியை நோக்கி நடப்பேன்" என்று கூறி வியக்க வைக்கிறார்.

## அவசர நிலை அறிவிப்பு.. கொந்தளித்த எதிர்க்கட்சிகள்!

# தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர் ராஜினாமா



வடகொரிய அரசு நிலையாக இல்லை என்றும், அந்நாட்டு அரசு மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் புதிய சட்டங்களை இயற்றி வருகிறது என்றும் சொல்லப்பட்டு வந்த நிலையில், தற்போது தென்கொரியாவில் பதற்றம் அதிகரித்துள்ளது. சமீபத்தில் தென்கொரிய அரசு கொண்டு வந்த இராணுவ சட்டம் எதிர்க்கட்சிகளால் முடக்கப்பட்டிருக்கிறது. இதனை தொடர்ந்து அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜினாமா செய்திருக்கிறார்.

கொரிய நாடு இரண்டாக பிரிந்ததிலிருந்து தென்கொரியா நாடு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் கட்டுப்பாட்டிலும், வடகொரியா சீனா, ரஷ்யா நட்பின் ஆதிக்கத்திலும் இருந்து வருகிறது. தென்கொரியா பற்றி அதிக அளவில் செய்திகள் வராவிட்டாலும், வடகொரியாக குறித்து சாரை சாரையாக செய்திகள் வந்துக்கொண்டே இருக்கும். காரணம் அந்நாடு, தனது சொந்த மக்களுக்கு எதிராக தொடர்ச்சியான அடக்குமுறைகளை கையாள்கிறது என்றும், உள்ளே என்ன நடக்கிறது என்பது கூட வெளியில் தெரியக்கூடாது என கவனமாக இருப்பதாகவும் சொல்லப்பட்டு வந்தது.

களியாட்ட விடுதிகள், மதுமானசாலைகள் சினிமா அரங்குகள், பாப் இசைகள் போன்றவற்றிற்கு வடகொரியாவில் கடும் கட்டுப்பாடுகள் இருப்பதாக சொல்லப்பட்டன. தவிர, அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன், சர்வாதிகாரியாக இருப்பதாகவும் பேசப்பட்டது. ஆனால் இதற்கெல்லாம் பெரியதாக ஆதாரங்கள் கிடைக்கவில்லை. தென்கொரிய நாட்டு ஊடகங்கள் எழுதும் யூக தகவல்களை மற்ற ஊகடங்கள் அப்படியே மொழிபெயர்த்து வந்தன.

சூழல் இப்படி இருக்கையில், பிரச்சினை வடகொரியாவில் இல்லை, தென் கொரியாவில்தான் என்று உணர்த்தும் விதமாக சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது.

அதாவது அந்நாட்டின் ஜனாதிபதி யூன் சாக் யோல் திடீரென அவசர நிலையை அறிவித்தார். தென்கொரியாவில், வடகொரிய ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது என்றும், அவர்களை வெளியேற்றுவதற்கும், ஒடுக்குவதற்கும் இந்த அவசர நிலை(இராணுவ சட்டம்) அறிவிக்கப்படுவதாகவும் திடீரென தொலைக்காட்சி முன்பு தோன்றி கூறியிருந்தார். ஆனால் இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனங்களை எழுப்பியிருந்தன.

தென்கொரியாவில் தற்போது இருப்பது ஒரு நிலையற்ற அரசாகும். அந்நாட்டின் வரலாற்றில் 50%க்கும் குறைவான ஆதரவோடு ஒருவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால் அது யூன் சாக் யோல்தான். நாடாளுமன் றத்தில் ஆயிரக்கணக்கில் கூடிய போராட்டக்காரர்கள், எதிர்ப்பு முழக்கங்க ளுடன் உள்ளே நுழைய முயன்றிருக்கின்றனர். இதனால் ராணவத்திற்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்திருக்கிறது.

மறுபுறும் இந்த அவசர நிலைக்கு எதிராக எதிர்க்கட்சி எம்பிக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வாக்களித்துள்ளனர். எனவே, அவசர நிலை அறிவிப்பு செல்லாது என்று அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் அறிவித்துள்ளார். இந்நிலையில், தென்கொரியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார். பாதுகாப்புத்துறை அமைச்சர் கிம் யோங்-யூன் ராஜினாமாவை அந்நாட்டு ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

அவருக்கு பதிலாக புதிய பாதுகாப்பு துறை அமைச்சராக சோய் பியூங் ஹயூக் என்பவரை நியமித்திருக்கிறார். இவர் தென்கொரியாவின் சவுதிக்கான தூதராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதர்களை ஆவியாக்கும் ஆயுதங்களை பயன்படுத்தும் இஸ்ரேல்?

## மிச்சமின்றிப்போன 2210 உடல்கள்! பகீர் தகவல்!







காசாவில் கொல்லப்பட்டவர்களில் 2210 பேரின் உடல்களை தடை செய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தி இஸ்ரேல் ஆவியாக்கி விட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பாலஸ்தீன ஆதரவு அமைப்பான ஹமாஸ் கடந்த வருடம் அக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தியது. சுமார் 20 நிமிடங்களில் ஹமஸால் ஏவப்பட்ட 5000க்கும் மேற்பட்ட ஏவுகணைகளால் திக்குமுக்காடிப்போனது இஸ்ரேலின் அயர்ன்டோம் நகரம். இந்த வான்வழித் தாக்குதல் மட்டுமின்றி இஸ்ரேலுக்குள் ஊடுருவி தரை வழித் தாக்குதலையும் நடத்திஇருந்தது ஹமாஸ்.

அத்துடன் கண்ணில் பட்டவர்களை எல்லாம் சுட்டு வீழ்த்திய ஹமாஸ் ஆயுத குழுவினர் 200க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்து சென்றனர். இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், ஹமாஸ் மீது போர் அறிவித்தது. கடந்த ஓராண்டுக்கும் மேலாக இந்த போர் நடைபெற்று வருகிறது. இதுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ள னர்.

அவர்களில் பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆவார். இந்நிலையில் கடந்த சில நாட்களாக இஸ்ரேல் சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை காசா பகுதியில் பயன்படுத்தி வருவதாக ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ளது. இதேபோல் ஐரோப்பாவை சேர்ந்த தனியார் மனித உரிமை அமைப்பும் இஸ்ரேல் அதிக வெப்பத்தை உமிழும் ரசாயண ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாக குற்றம்சாட்டியது.

மனித உடல்களை உருக்கி மிச்சங்கள் இல்லாமல் செய்யும் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்துகிறதா என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியது. இந்நிலையில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட 1760 பாலஸ்தீனியர்களின் உடல்கள் மாயாமாகி இருப்பதாகவும் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மூலம் இஸ்ரேல் அவர்களின் உடல்களை மிச்சம் இல்லாமல் செய்துவிட்டதாகவும் காசா சுகாதாரத்துறை ஏற்கனவே குற்றம்சாசாட்டிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு லட்சம் டொலரை கடந்தது பிட்காயின் மதிப்பு



முன்னெப்போதும் இல்லாத வகையில் பிட்காயின் ஒன்றின் மதிப்பு ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை கடந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. இதன்படி, பிட்காயினின் மதிப்பு 1,03,132.80 டொல ராக பதிவாகியுள்ளதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத் தை தொடர்ந்து இவ்வாறு மதிப்பு அதிகரித்துள்ளதாக கூறப்ப டுகின்றது. அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, பிட்காயின் விலையில் பெரும் ஏற்றம் ஏற்பட்டது. இதன்படி, கடந்த ஒரு மாதத்தில் 50.96 சதவீதம் விலை அதிகரித்துள்ளது.

ட்ரம்பின் கொள்கைகள் கிரிப்டோகரன்சிகளுக்கு நன்றாக இருக்கும் என்ற மதிப்பீட்டால் சந்தை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது, ட்ரம்ப் டிஜிட்டல் சொத்துக்களை ஆதரிப்பதாக உறுதியளித்தார்.

ட்ரம்பிற்கான தேர்தல் பிரசாரத்தில் பல பில்லியன்களை கொட்டிய உலகின் மிகப் பெரிய பணக்காரரான எலோன் மஸ்க், கிரிப்டோகரன்ஸிகள் மீது கொண்டுள்ள ஆர்வமும் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

2016ஆம் ஆண்டு 453 டொலர்களாக இருந்த பிட்காயின் விலை தற்போது லட்சத்தை கடந்துள்ளது. எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு (2025) பிட்காயின் மதிப்பு ஐந்து லட்சம் டொலர் வரை அதிகரிக்கும் எனவும், 2033ஆம் ஆண்டு ஒரு மில்லியன் டொலராக உயரக்கூடும் எனவும் உலகளாவிய முதலீட்டு நிறுவனமான பெர்ன்ஸ்டீன் அதன் சமீபத்திய அறிக்கையில் கூறியுள்ளது.

# 40 ஓவர்களில் தென்னாபிரிக்கா 122/3

## தொடரை சமன் செய்யுமா இலங்கை?



இலங்கை கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடர் உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப்புக்கு உட்பட்ட போட்டித் தொடர் ஆகும், இதில் முதல் போட்டியில் தென் ஆபிரிக்கா அணி 233 ஓட்டைங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என தென்னாபிரிக்கா முன்னிலையில் உள்ளது.

இந்த போட்டியில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்ற தென்னாபிரிக்கா அணி முனைப்பு காட்டும். அதேவேளை 2ஆவது போட்டியில் வென்று தொடரை சமன் செய்யும் நோக்கில் இலங்கை விளையாடும் என எதிர்பார்க்கப்பட நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று தென்னாபிரிக்காவின் கெபெர்ஹா மைதானத்தில் இலங்கை நேரப்படி பி.ப. 2.00 மணிக்கு ஆரம்பமானது.

நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்ததால் இலங்கை அணி பந்து வீச்சை ஆரம்பித்தது.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணி சார்பில் துடுக்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க வீரர்கள் நேற்று மாலைவரை 36 ஓவர்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களை பெற்றனர். இதில் எய்டன் மார்கம் 20 ஓட்டங்களை பெற்றவேளை ஆட்டமிழ ந்தார். ரயன் ரிக்கல்டன் 40 ஓட்டங்களையும், டெம்பா கௌமா 47 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இதேவேளை இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில் லஹிரு குமார 2 விக்கெட்டுக்களையும், அசித பெர்னாண்டோ 1 விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதது




# டி20 கிரிக்கெட்: ஒரு போட்டி 2 உலக சாதனைகள் படைத்த பரோடா அணி



இந்தியாவின் உள்நாட்டு டி20 போட்டியான சையத் முஷ்டாக் அலி டிராபியில் (SMAT) வியாழன் (05) அன்று சிக்கிமுக்கு எதிராக பரோடா அணி 5 விக்கெட் இழப்புக்கு 349 ஓட்டங்களை குவித்தது.

இதனால், ஒட்டுமொத்த டி20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டம் குவித்த அணி என்ற சாதனையை பரோடா படைத்தது.

சிக்கிமுக்கு எதிராக இந்தூரில் உள்ள எமரால்டு உயர் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பரோடா அணியின் பானு பனியா 51 பந்தில் 15 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக பெற்றார்

இதற்கு முன்னர் ஐசிசி ஆடவர் டி20 உலகக் கிண்ண ஆபிரிக்கதுணை பிராந்திய தகுதிச் சுற்று குழு பி போட்டியில் சிம்பாப்வே டி20 போட்டியில் காம்பியாவுக்கு எதிராக 344/4 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்திருந்தது.

டி20 கிரிக்கெட் வரலாற்றில் அதிகபடியான ஓட்டங்களை குவித்த அணி என்ற புதிய சாதனையை சிம்பாப்வே அப்போது படைத்தது.

முன்னதாக 2023 ஆம் ஆண்டு நடந்த டி20 போட்டியில் மங்கோலியாவுக்கு எதிரான போட்டியில் நேபாளம் 314/3 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இந்த நிலையில் இந்த சாதனைகளை தற்சமயம் சையத் முஷ்டாக் அலி கிண்ணத்தில் குறித்த சாதனையை முறியடித்து பரோடா அணி இந்த புதிய உலகசாதனையை படைத்துள்ளது. அத்துடன், இந்த போட்டியில் பரோடா ஒரு இன்னிங் ஸில் 37 சிக்ஸர்களை அடித்த சாதனையையும் படைத்துள்ளது.

இதனால் சையத் முஷ்டாக் அலி கிண்ணத்தில் மொத்தம் 300 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களை பதிவு செய்த முதல் அணியாக பரோடா பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டென்னிஸ் போட்டியில் சென்னை தோல்வி



இந்திய டென்னிஸ் சம்மேளனம் சார்பில் 6ஆவது முறையாக பிரீமியர் லீக் டென்னிஸ் போட்டி மும்பையில் நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் சென்னை ஸ்மாஷர்ஸ் 54-46 என்ற புள்ளிக் கணக்கில் பெங்களூரு எஸ்ஜி பைப்பாசை வீழ்த்தியது.

சென்னை ஸ்மாஷர்ஸ் 2ஆவது ஆட்டத்தில் நேற்று ஐதராபாத் ஸ்டிரைக்கர்சை எதிர் கொண்டது. இதில் சென்னை அணி 45-55 என்ற கணக்கில் போராடி தோற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 : பாகிஸ்தான் அணி அறிவிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தற்போது சிம்பாப்வேவுக்கு எதிரான டி20 தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்நிலையில், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி:

முகமது ரிஸ்வான் (கேப்டன்), அப்ரார் அகமது, பாபர் அசாம், ஹாரிஸ் ரவுப், ஜஹந்த் கான், முகமது அப்பாஸ் அப்ரிடி, முகமது ஹஸ்னைன், முஹம்மது இர்பான் கான், உமைர் பின் யூசுப், சைம் அயூப், சல்மான் அலி அகாடி, சுஹீன் அலி ஆகா, மொகிம், தயப் தாஹிர் மற்றும் உஸ்மான் கான் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

## ஜுனியர் ஆசிய ஹொக்கி போட்டி;

# சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு மோடி வாழ்த்து




10 அணிகளுக்கு இடையிலான 10ஆவது ஜுனியர் ஆசிய கிண்ண கொக்கி போட்டி (21 வயதுக்கு உட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடந்தது.

இதில் அரையிறுதி போட்டிகளில் இந்திய அணி 3-1 என்ற கோல் கணக்கில் மலேசியாவையும், பாகிஸ்தான் அணி 4-2 என்ற கோல் கணக்கில் ஜப்பானையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இந்தியாவும், பாகிஸ்தானும் இறுதிப்போட்டியில் நேற்று மோதின. தொடக்கம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் 5-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

இந்த நிலையில் , சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஜுனியர் ஆசிய கிண்ண கொக்கி சம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணிக்கு இது ஒரு வரலாற்று தருணம். அவர்களின் ஒப்பற்ற திறமை, மற்றும் நம்பமுடியாத குழுப்பணி ஆகியவை இந்த வெற்றியை விளையாட்டு பெருமையின் வரலாற்றில் பொறித்துள்ளன.இளம் சம்பியன்களுக்கு வாழ்த்துகள் . அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகள் என தெரிவித்துள்ளார்.

# ரொனால்டோ ஓய்வு .. முதல் தோல்வியை சந்தித்த அல் நாசர்..!

இந்த ஆண்டு ஆசிய சம்பியன்ஸ் லீக் எலைட்டில் திங்களன்று கட்டாரில் அல் சத்திடம் 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடிக்கப்பட்டது. ஏற்கனவே தகுதி பெற்ற அல் நாசர் இந்த ஆண்டு ஆசிய சம்பியன்ஸ் லீக் எலைட்டில் முதல் முறையாக தோல்வியை சந்தித்துள்ளது. இதற்கு ஒரு காரணம் ரொனால்டோ அணியில் இல்லாதது என்றும் சொல்லலாம்.



39 வயதான ரொனால்டோவிற்கு இந்த போட்டியில் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ரொனால்டோ, கட்டார் அணியான அல் கராஃபாவுக்கு எதிராக, கடைசி நேரத்தில் இரண்டு கோல்கள் அடித்தார். நல்ல நிலையில் இருக்கும் ரொனால்டோவிற்கு இந்த போட்டியில் ஓய்வு கொடுத்ததன் காரணமாக அல் நாசர் தோல்வியை சந்தித்தது.

இந்த தொடரில் 18 போட்டிகளில் 15 கோல்களை அடித்த ரொனால்டோ, அல் அவ்வல் பூங்காவில் அவரது தாயார் டோலோரஸ் அவிரோ மற்றும் அவரது நண்பர் ஜார்ஜினா ரோட்ரிக்ஸ் ஆகியோருடன் அமர்ந்து இந்த போட்டியை பார்த்தார். இந்நிலையில் இரண்டாவது பாதியில் எட்டு நிமிடங்களில் அக்ரம் அஃபிஃப் மூலம் அல் சத் முன்னிலை பெற்றது.

அதன் பிறகு அல் நாஸர் 80 நிமிடங்களில் ஒரு கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார். இருப்பினும் கடைசியாக ஒரு கோல் அடித்து அல் சத் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியாவின் அதிரடி நீடிக்குமா?

## 2ஆவது டெஸ்ட் அடிலெய்டில் இன்று ஆரம்பம்




இரு அணிகள் இடையேயான 5 போட்டிகள் கொண்ட போர்டர்-கவாஸ்கர் கிண்ண தொடரில் பெர்த் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 295 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தியா-அவுதிரேலிய அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி பகல்-இரவாக அடிலெய்ட் மைதானத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகவுள்ளது.

இந்த டெஸ்டிலும் இந்திய அணியின் அதிரடி நீடிக்குமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. சொந்த மண்ணில் நியூசிலாந்திடம் 3 டெஸ்டிலும் தோற்று வெள்ளையடுப்பு செய்யப்பட்ட பிறகு பெர்த் டெஸ்டில் பெற்ற வெற்றி மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது இந்திய அணி. மேலும் அவுதிரேலிய பிரதமர் லெவனுக்கு எதிரான பகல்-இரவு பயிற்சி வென்று இருந்தது.

இந்நிலையில் முதல் டெஸ்டில் விளையாடாத அணியின் தலைவர் ரோகித் சர்மா அணிக்கு திரும்பி இருக்கிறார். இதனால் அவருடன் தொடக்க வீரராக ஜெய்ஷ்வால் ஆடுவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கே.எல்.ராகுல் 3-வது வரிசையில் களம் இறங்குவார்.

இதனிடையே பெர்த் டெஸ்டில் 2ஆவது இன்னிங்சில் அஸ்வின், ஜடேஜா போன்ற முன்னணி சுழற்பந்து வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் வாஷிங்டன் சுந்தர் முதல் டெஸ்டில் இடம் பெற்றார். இதே நிலை 2ஆவது டெஸ்டிலும் நீடிக்குமா? என்று தெரியவில்லை.

முதல் டெஸ்டில் ஜெய்ஷ்வால் (161 ஓட்டங்கள்) விராட் கோலி சதம் அடித்து முத்திரை பதித்தனர்.

பந்து வீச்சில் பும்ரா (8 விக்கெட்), முகமது சிராஜ் (5), ஹர்சிக் ரானா (4) சிறப்பாக செயல்பட்டனர். முதல் டெஸ்டில் முதல் இன்னிங்சில் 150 ஓட்டங்களில் சுருண்டு 2ஆவது இன்னிங்சில் அபாரமாக விளையாடி இந்தியா பெற்ற வெற்றி மிகவும் முக்கியமானதாகும்.

பகல்-இரவு டெஸ்டில் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த அணி முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்கும் ஆர்வத்தில் உள்ளது. எனவே இந்திய அணி வீரர்கள் இன்று நடைபெறவுள்ள போட்டியில் தங்களது முழு திறமையை வெளிப்படுத்துவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 06ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.